அமிர்தவசனி

-தெய்விக மாதப் பத்திரிகை

...OPADHYAYA ... LIBRARY
DR. ...
BESANT NAGAR ... MADRAS-90

மலர் : 14	சுபகிருது௵ ஆடி௴	வருட சந்தா
இதழ் : 4	ஜூலை—ஆகஸ்ட் 1962	ரூ. 3-00

— Page -157—



திருவருள சம்மதப்படி மதுரை நகர் அமைததல்
சித்திர விளக்கம் 4. பக்கம் 148

ACC. NO — 18583 —



158

உள்பொருள்

பக்கம்

1. மாணிக்கமாலை (திருப்புகழ்மணி) ... 145
2. மதுரையின் தோற்றம் (கி. வா. ஜகந்நாதன்) ... 148
3. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) ... 150
4. " ஆதிமக மாயி யம்பை " ஊதிமலை திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 154
5. முழுதும் செய்யோன் (கி. வா. ஜ.) ... 164
6. எல்லாம் உனக்காக (அ. கி. ரங்கராஜன்) ... 167
7. உபநிஷதங்களின் உள்ளொளி (ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி) ... 171
8. சிவவிஷ்ணு விரதம் (ரஸபதி) ... 181
9. SIVAPPADI SIVA VIZHA (*Thiruppugal Mani*) ... 191

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 14	சுபகிருது ஆடி௴ ஜூலை—ஆகஸ்ட் 1962	இதழ் 4

மாணிக்க மாலை

(திருப்புகழ் மணி)

கந்தன் முதலிய நாமங்களாகிய மாணிக்கங்கள் வைத்திழைக்கப் பட்டது திருப்புகழ். அதில் ஆனந்த சொரூபமாகிய பரம்பொருள் இருக்கிறது. அது வந்து தாக்கும் பொழுது உண்டாகும் ஆனந்தத்தைச் சொல்ல முடியாதென்கிறார் அருணகிரியார்.

ஆனந்தத்தின் தன்மையைப் பட்டினத்தார் சொல்லுகிறார். "சுரப்பற்று, வல்வினைச் சுற்றமற்று, வரப்பற்று பரப்பற்றிருப்பதே பரமானந்தமென்கிறார்.

உள்ளத்தில் ஆசையின் சுரப்பு கூடாது. ஆனல் முருக நாமச் சுரப்பு இருக்க வேண்டுமாம். ஊற்றுப் போல் நாமாமிருத ரசம் ஊறிக் கொண்டேயிருக்க வேண்டுமாம். இங்கு சுற்றமென்று குறிப்பது நம் உறவினரையல்ல; நம்மைச் சுற்றிச் சுற்றி வருத்தும் வல்வினையே சுற்ற'மென்று குறிப்பிடப்படுகிறது. நாமத்தின் சுரப்பால் வல்வினையின் சுரப்பு அற்று விடுகிறது.

அயலார் பொருளை அபகரிக்கும் பாவம்,
நயமார் தரும நலமறிந்தோர் செய்யாரே.

தொழில்கள் அறுவதெப்படி? ஆசையினாலும் ஆணவத்தினாலும் செய்வதே தொழில். பற்றின்றிச் செய்வது தொழிலல்ல. கடமையாகும்.

உலகத்திற்குத் தமிழ்மறையைப் போதித்த திருவள்ளுவரும் தொழிலை விடவில்லை. நெசவுத் தொழில் செய்துகொண்டே ஆண்டவனுடைய திருக் கூத்தை யனுபவித்தார். ஆண்டவனுடன் ஜீவர்களை அன்பெனும் நூலால் ஒட்டவைத்திருக்கிறது. அதுவே ஆண்டவனுக்கும் நமக்குமுள்ள உறவு நூல். அன்பாகிய அந்த நூல் அற்றுப் போகாதபடி, சிவ சிவா வென்ற நாமத்தைச் சொல்லி நாவிலூறும் எச்சி லால் அன்பு நூலைக் குறுக்கும் நெடுக்குமாக ஒட்ட வைத்துக் கொண்டிருந்தாராம். சிவ சிவா வென்று சொல்லிக் கொண்டிருந்தால், அவர் நாவிலூறும் நீர் (எச்சில்) தூய்மையாகி கங்கை நீராகி விட்டதாம். "சிவாய நம ஓம்" என்று ஒரு அன்பு நூலைக் குறுக் காகவும், "ஹராய நம ஓம்" என்று மற்றொரு அன்பு நூலை நெடுக்காகவும் சேர்த்து நெய்துகொண்டிருந் தாராம். இவ்வாறு அன்பு நூலால் ஆண்டவனையும், ஜீவராசிகளையும் ஒன்றாகச்சேர்த்து நெய்துவிட்டாராம் திருவள்ளுவர். உலகெங்கும் குறுக்கும் நெடுக்குமாக எல்லையற்று ஓடுகின்ற அன்பே சிவம். சிவமே அன்பு. அன்பை ஆதாரமாகக் கொண்டது திருக்குறள்.

உலகத்திலுள்ள பொருள்களுக்கு வரம்புண்டு. அதாவது ஒரு எல்லையுண்டு. அவற்றை அளவாகவே அனுபவிக்க வேண்டும். பிரம்மத்தை யனுபவிப் பதற்கு வரம்பேயில்லை. வரப்பற்று நாதனை வாயாரப் பாடிக் கொண்டே யிருப்பது பேரின்பமாம்.

பிறன்மனையை இச்சிக்கும் பேதைமகன் தன்னை,
அறக்கடவுள் சீறும் ; அருநரகில் ஆழ்த்துமரோ.

உலகம் என்ற நந்தவனத்தில் பத்து மாதம் பிரம்மனுகியவனை வேண்டி, உடல் என்ற குடத்தைக் கொண்டு வந்தானும் ஜீவன். அக்குடத்தில் ஆண்டவனை வைக்காமல் நானென்ற ஆணவத்தை நிரப்பி அதை உடைத்து விடுகிறானும். அதில் நாமத்தை நிரப்பினல் ஆனந்தமாய் ஆடலாம். எத்தனை ஆடினுலும் உடையாது.

அம்மன் கோயில் பூசாரிகள் தலையில் குடத்தை அலங்கரித்து வைத்து ஆடுகின்றனர். அது உடம்பாகிய குடத்தில் பராசக்தியை வைத்து ஆடுவதைக் குறிக்கிறது. பரமசிவனும், தன் தலையில் பராசக்தியாகிய கங்கையை வைத்துக் கூத்தாடும் ஒரு பூசாரியே.

ஆதலால், இரவும் பகலும் முருகா, முருகாவென்று சொல்லிக் கொண்டிருந்தால் உடம்பில் அமிருதம் நிரம்பும். ஆனந்தம்பெருகும். எப்பொழுதும் கூத்தாடிக் கொண்டே யிருக்கலாம்.

சுபம்

சாமிநிந்தை, சாஸ்த்ரவசை, செய்தசதி காரரெலாம்,
ஊமைகளாய் வந்(து,) இவ் வுலகில் உழல்கின்ருரே.

மதுரையின் தோற்றம்

[கி. வா. ஜகந்நாதன்]

கடம்பவனத்துக்குக் கிழக்கே மணவூர் என்னும் நகரில் அக் காலத்தில் பாண்டிய மன்னர் அரசாண்டு வந்தார்கள். அவர்களில் ஒருவன் குலசேகர பாண்டியன். அவன் காலத்தில் தனஞ்சயன் என்ற வணிகன் வியாபாரம் செய்வதற்காக மேல் திசையில் உள்ள ஊர்களுக்குச் சென்று மீண்டு வரும் போது, கடம்பவனத்தை அணுகினான். அப்போது கதிரவன் மறைந்து இரவு வந்தது. அந்த இருளில் இந்திரனால் நிறுவப் பெற்ற விமானம் பேரொளி பரப்பிக் கொண்டு நிற்பதைக் கண்டு, அங்கே சென்று அவ்விமானத்தின் கீழே எழுந்தருளி யிருந்த இறைவனைத் தரிசித்து அங்கே தங்கினான்.

அன்று சோமவாரம். தேவர்கள் வானுலகத்தினின்றும் வந்து நான்கு யாமத்திலும் சிவராத்திரிபோல் இறைவனைப் பூசை செய்யலானார்கள். அவர்கள் செய்த பூசையை ஆண்டவனருளால் வணிகன் கண்டு வியந்தான். விடிந்த பிறகு தேவர்கள் போய்விட, தனியாக நின்ற இந்திர விமானத்தையும் இறைவனையும் தரிசித்து இன்புற்றான்.

பின்பு மணவூர் வந்து தான் இரவிலே கண்ட அதிசயத்தைப் பாண்டிய அரசனிடம் சொன்னான். அதைக் கேட்ட மன்னன் கையைத் தலைமேல் வைத்துக் கும்பிட்டு இறைவனை நினைந்து உருகினான். இரவு வந்தது. அப்போது இறைவன் ஒரு சித்தரைப் போலப் பாண்டியன் கனவில் தோன்றி, "கடம்ப வனத்தைத் திருத்தி அங்கே ஒரு நகரை உண்டாக்குவாயாக!" என்று அருள் செய்து மறைந்தான்.

விடிந்ததும் உடனே மன்னன் அமைச்சர் முதலியவர்களோடு புறப்பட்டு மேற்றிசைக்கண் சென்று கடம்பவனத்தை அடைந்தான். அங்குள்ள பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி இந்திர விமானத்தின் கீழ் அருட்குறியாக இலங்கிய இறைவனைக் கண்டு என்புருக நின்று பணிந்து துதித்தான்.

அதிகமாத் தன்னைநம்பும் ஆப்தர்உளம் நோகச்,
சதிசெய்தார் நெஞ்சவரைச் சாகடித்தல் காணீரோ.

"சரணம் மங்கையோர் பங்குறை சங்கர சரணம்
சரணம் மங்கல மாகிய தனிமுதல் சரணம்
சரணம் மந்திர வடிவமாம் சதாசிவ சரணம்
சரணம் உம்பர்கள் நாயக பசுபதி சரணம்."

பிறகு ஏவலாட்களைக் கொண்டு காட்டை வெட்டித் திருத்தும்படி கட்டளை யிட்டான். உடல் வலி படைத்த மக்கள் பலர் மரங்களை வெட்டிக் காட்டை அழிக்கத் தொடங்கினர். அரசன் தன் மந்திரிமார்களுடன் ஒருபக்கத்தில் அமர்ந்திருந்தான்.

அப்போது, இரவில் பாண்டியனுடைய கனவில் தோன்றிய சித்தர் திருவுருவத்தோடு இறைவன் அங்கே எழுந்தருளி வந்தான். அரசன் அவரை வணங்கி ஆசனம் கொடுத்து அமரச் செய்தான். சித்தர் ஆகமநூல் முறைப்படியும் சிற்ப நூல் முறைப்படியும் இன்னவாறு கோயிலையும் நகரத்தையும் அமைக்க வேண்டும் என்று விரிவாகச் சொல்லி விட்டுத் திடுமென மறைந்தார்.

இறைவன் கட்டளை யிட்டபடியே பாண்டியன் முதலில் ஆலயத்தை அமைத்தான. பலவகை மண்டபங்களை எழுப்பினான். பிறகு வீதிகளைச் சமைத்து அழகிய நகரத்தையும் உருவாக்கினான். தன்னுடைய அரண்மனையை வடகிழக்கே அமைத்துக் கொண்டான. இந்த நகரத்துக்குச் சாந்தி செய்து மக்களைக் குடியேற்ற வேண்டும் என்று எண்ணிய அரசன் இறைவனை வழிபட்டான். அப்போது சிவபெருமான் தன் சடையிலுள்ள பிறையிலிருந்து அமுதத்தை உகுப்ப, அது அந்தப் புதிய நகர முழுவதும் பரந்து அதனைப் புனிதமாக்கியது. சந்திரகலை யமுதத்தின் தொடர்பால் அது மதுரமயமாகியது; அதனால் அந்த நகரத்துக்கு மதுரை என்ற திருநாமம் உண்டாயிற்று.

அப்பெரிய நகரத்துக்குக் கிழக்கே சாஸ்தாவும், தெற்கே சப்த கன்னியரும், மேற்கே திருமாலும், வடக்கே துர்க்கையும் காப்புத் தெய்வங்களாக அமையச் செய்தான் பாண்டியன். ஆதிசைவர்களையும் பல பெருங்குடி மக்களையும் அழைத்து வந்து அந்நகரில் குடியேற்றினான்.

சைவமும் தருமமும் தழைக்கும் பெரு நகரமாய், சிவராசதானியாய், பாண்டி நாட்டின் தலைநகரமாய் விளங்கத் தொடங்கியது மதுரைமா நகரம்.

குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

14. தபராஜ பதயே நமோநம :

தபராஜ—தவத்திற்கு அரசனை ;

பதயே—தலைவனுக்கு ;

நமோநம—போற்றி ! போற்றி !!

தவம் ; தபம் என்பது வடசொல். தவம் என்று தற்பவமாகத் தமிழில் வழங்கும். **தபு** என்ற தாதுவுக்கு 'கொளுத்துதல்' (to burn) என்று பொருள். மன ஒருமை பெறவும், ஆசை முதலிய அழுக்குகளைப் போக்கவும், அவற்றின் இருப்பிடமான உடலை ஒறுத்தல் என்பதாம். இக்கருத்தையே தவம் என்பதற்கு "மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயிலில் நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்ருல் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களை ஓம்புதல்" என்று பரிமேலழகர் உரை கூறியது உன்னுக.

" உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு."

தவம் என்பது உணவில்லாமை யன்றி வேறில்லை என்ற பொருளில்

"த பஇதி தபோ நாநச நாத்பரம்."

தைத்திரீயாருண சாகை நாராயணத்தில் : வருகிறது. அவற்ருல் உணவு முதலியவற்றை ஒழித்து இயற்றப்படும் விரதங்கள் தவமெனப்பட்டன. இவையனைத்தும் உள்ளம் தூய்மையுற்று இறைவனை ஒருமுக உணர்வுடன் தியானிக்க அமைந்த உபாயமே என்க.

சொல்லத் தகாதன சொல்லிமனம் நோகச்செய்
பொல்லார்தம் வாழ்வு, புழுங்கு(ம்); இது நிச்சயமே.

" நாதபஸ் கஸ்யாத் மஜ்ஞாநேதிகம : கர்மஸித்திர்
வேத்யேவம் ஹ்யாஹ தபஸாப் ராப்யதே ஸத்வம் "

[" தவசில்லார்க்கு ஆன்ம ஞானம் உண்டாதல் இல்லை ; கன்மப் பிரயோசனமும் உண்டாவதில்லை. ஏனெனில், தவசினால் சத்துவம் (சித்த சுத்தி) ஏற்படுகிறது "] என்று மைத்ராயண்யுபநிஷத்தில் காணப்படுகிறது. எனவே சித்த சுத்தியின் பொருட்டுச் செய்யப்படுவது தவம் எனப்பெற்றோம்.

" உணவிலே உயிரிருக்க உற்ற இக்காலத்து மாந்தர், இத்தவத்தை இயன்ற அளவே இழைக்கத் தககவராவர். இன்னோர் போன்றார் அல்லாதாரே பண்டைக் காலங்களில் பன்னெடுநாள், பல்லாயிர வாண்டு தவமிழைத்திருந்தனர். இவ்விவரம் " உயிரானது முதல் (கிரேதா) யுகத்தில் எலும்பிலும், இரண்டாம் (திரேதா) யுகத்தில் தசையிலும், மூன்றாம் (துவாபர) யுகத்தில் உதிரத்திலும், நான்காம் (கலி) யுகத்தில் சோறு முதலியவற்றிலும் இருக்கும் " என்று பராசரஸ்மிருதி ஆசாரகாண்டம் பகர்வதைப் புரம்பனடிகள் எடுத்துக் காட்டி, இவ்வித தவமும் முன்னே செய்த புண்ணியப் பயனுடையார்க்கே கூடும்.

" தவமும் தவமுடையார்க்கு ஆகும் "
என்பர். அதனால் நம் அருணகிரியார்,

" காய்கனி துய்த்தும் காயம் ஒறுத்தும்
காசினி முற்றும் திரியாதே "

இளம் பூரணனது இணையடிக் கமலாலயத்தில் அரை நிமிஷ நேரமட்டில் செய்யத்தக்க முறைப்பட்ட தியானமே தவம் என்றனர்.

தினையளவு காலம் திகழமைதி கொண்டோர்,
பனையளவு புண்ணியம் பண்ணினரை ஒப்பாரே.

"வேடர் செழுந்தினை காத்திதண்
மீதி லிருந்த பிராட்டிவி
லோசன அம்புக ளாற்செயல்—தடுமாறி
மேனித ளர்ந்துரு காப்பரி
தாபமு டன்புன மேல்திரி
வேளை புகுந்த பராக்ரம—மதுபாடி
நாடறி யும்படி கூப்பிடு
நாவலர் தங்களி ளுற்பதி
னுலக கங்களு மேத்திய—இருதாயில்
நாறுக டம்பணி யாப்பரி
வோடு பணிந்து சடாக்ஷரம்
நாட அருந்தவம் வாய்ப்பதும்—ஒருநாளே"

என்கிருர். மலையாறு கூறெழ வேல் வாங்கினனை வணங்கும் அன்பு நிலையே மாதவம் என்றறிகிரேம்.

தபராசன்; அரசன் என்பான் குடி மக்களைக் காக்கும் கடமை பூண்டவன். அவனது ஆட்சியில் நாட்டில் வாழும் நன்மக்களே யன்றி காட்டில் வாழும் கடுந்தவசியர்களையும், அவர் தாம் மேற்கொள்ளும் தவ முதலியவற்றிற்கு இடையூறு வாராமலும் காக்கின்றவன் ஆதலான், காவலன் என்றும் ஒரு பெயர் அவனுக்கு வழங்கும். நமது முருகவேளும் தவமா தவங்கள் பயில் அடியார்களைக் காக்கின்ருன்.

"முளையிள மதியை எடுத்துச் சாத்திய
சடைமுடி இறைவர் தமக்குச் சாத்திர
முறையருள் முருக! தவத்தைக் காப்பவர்—தம்பிரானே."

(திருப்புகழ்)

வேறுபொருள்: தபராஜனுகிய பதி என்னது தபராஜர் களது பதி எனவுமாம். தபராஜர் ஆவார் அகத்தியர், நாரதர்,

---

கள்ளமனம் கொண்டெந்தக் காரியத்தைச செய்தாலும்,
உள்ளநலம் யாவும், ஒருங்கிழந்து நிற்பாரே.

அருணகிரியார் முதலிய தவமுனிவர்கள்; பராசர முனிவர் மக்களான ஆறுமுனிவரர்களுக்கும் தலைவனுன குமார பிரானுக்குப் போற்றி போற்றி என்றும் கூறலாம்;

தணிகைத் தவசியர்: காமன், மக்கள் மனத்தில் காமக்கனலை மூட்டுதற்கென்றே மா, தாமரை, முல்லை, அசோகு, முழுநீலம் என்ற ஐந்து மலர்களை அம்புகளாக வைத்துள்ளான். அதனுல் அவனுடைய முயற்சி முற்றிலும் வெற்றிபெறும். அவ்வித மலர்களையே எடுததுத் தொடுத்து மாலைகளாக்கி அணிந்து கொண்டனர் அழகிய மங்கையர். ஐம்புலன் அடக்கித் தணிகை மலையில் அருந்தவம் செய்யும் தவசியர் முன்பு பாடலும் நிகழ்த்தினர். தவராஜபதியான தணிகை நாயகன் தவத்தைக் காப்பதால், அவர்களது தவம் எவ்வாற்ருனும் கலையவே இல்லை. அது மட்டுமா? மேலும் மேலும் நீண்டு நீண்டு ஓங்கி வளர்வதாயிற்று இதனைக் கண்ட மெல்லியலார் வியந்து நின்றனர். அவ்வித மெய்யான தவத்து மேலோர் வாழும் தணிகை மாமலைத் தம்பிரானுக குகபிரான் விளங்குகிருன்.

" மாரன் வெற்றிகொள் பூமுடிக்குழ
லார் வியப்புற நீடு மெய்த்தவர்
வாழ் திருத்தணி மாமலைப்பதி —தம்பிரானே."

என்று நம் அருணகிரியார் அருளுவது காண்க.

எனவே, தவம் என்பது புலனடக்கிப் புள்ளி மயிலோனைப் போற்றுவதே எனவும், அவ்வித தவசியரைக் காக்கும் தலைவன் சண்முகனுதன் என்பதும், அதனுல்தான மெய்த்தவர்கள் தணிகையில் நீடு வாழ்கின்றனர் எனவும் இரத்தினச் சுருக்கமாக இயம்பும் அழகை எண்ணிப் பாருங்கள்! ஆதலால் நமது பாம்பனடிகளும் தவபதியாகவும், தவசியர் வணங்கும் மாபெருந்தலைவனுகவும் விளங்கும் வேலண்ணலுக்கு வணக்கம் என்று கூறினர்.

ஊதிமலை

திருப்புகழ் விரிவுரை

[குகஸ்ரீ]

ஆதிமக மாயி யம்பை தேவிசிவ னார்ம கிழ்ந்த
ஆவுடைய மாது தந்த குமரேசா!
ஆதரவ தாய்வ ருந்தி யாதியரு ணேச ரென்று
ஆளுமுனை யேவ ணங்க அருள்வாயே!
பூதமது வான வைந்து பேதமிட வேய லைந்து
பூரணசி வாக மங்க ளறியாதே
பூணுமுலை மாதர் தங்க ளாசைவலை யேநினைந்து
போகமுற வேவி ரும்பு மடியேனை
நீதயவ தாயி ரங்கி நேசவரு ளாபு ரிந்து
நீதிநெறி யேவி ளங்க வுபதேச
நேர்மைசிவ னார்தி கழ்ந்த காதிலுரை வேத மந்த்ர
நீலமயி லேறி வந்த வடிவேலா!
ஓதுமறை யாக மஞ்சொல் யோகமது வேபு ரிந்து
ஊழியுணர் வார்க டங்கள் வினைதீர
ஊனுமுயி ராய்வ ளர்ந்து ஓசையுடன் வாழ்வு தந்த
ஊதிமலை மீது கந்த பெருமாளே!

(பதவுரை.) (ஆதிமகமாயி........குமரேசா!)

ஆதி—, மகமாயி—, அம்பை—, தேவி—, (எனும் பெயர்களுடன்);

சிவனார் மகிழ்ந்த ஆவுடைய மாது தந்த குமர ஈச — சிவபிரானார் (திருவுளம்) மகிழ்ந்த சிவஞானச் செல்வி

எண்ணிப் பாராமல இழிதொழிலைச் செய்கின்றோர்,
புண்ணாகி நெஞ்சம், புழுங்குநாள் உண்டாமே.

(முதலிய பல பெயருள) முதல்வி யருளிய குமரா! அருள் திருவாளா !

(உபதேச நேர்மை.........வடிவேலா !)

உபதேச நேர்மை சிவனுர் திகழ்ந்த காதில் உரை வேத மந்த்ர - உபதேச நுட்பத்தைச் சிவனுர்து விளங்கும் செவியில் விளம்பிய வேத மந்திர உருவனே !

நீல மயில் ஏறி வந்த வடிவேலா - நீல நிற மயில்மேல் ஏறி, (சேவை தர) எழுந்தருளும் ஞான சக்திதரா !

(ஓதுமறை.........பெருமாளே !)

ஓது மறை ஆகமம் சொல் யோகம் அதுவே புரிந்து - ஓதப் பெறும் வேத ஆகமங்கள் விளம்பும் யோகத்தை விரும்பிச் செய்து ;

ஊழி உணர்வார்கள் தங்கள் வினைதீர - யுக இறுதியை உணரும் ஞானிகளினுடைய (அழியா சஞ்சித) வினையழிய ;

ஊனும் உயிராய் வளர்ந்து - (அவர்கள் தம்) ஊனுள்ளும் உயிர்ப்புள்ளும் உறவு பூண்டிருந்து;

ஓசையுடன் வாழ்வு தந்த - அருள் நாதத்துடன் (சிவ ஞானப்) பெருவாழ்வையும் அருளிய ;

ஊதி மலை மீது உகந்த பெருமாளே - ஊதி மலைமேல் உவகையுடன் இருக்கும் (மேதகு) பெருமை மேலோனே !;

(பூதமதுவான... .....அடியேனை.)

பூதம் அது ஆன ஐந்து பேதம் இடவே அலைந்து - பூத பௌதிகங்களான (சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்) ஐந்தும், (ஒன்று படாமல்) வேற்றுமையை விளைவிகக, (அதனல் அடியேன் தலைவிரி கோலமாக) அலைந்து :

கலவி, அதிகாரம், காணும் பெருஞ்செல்வம்,
வலலமுன் புண்ணியத்தால் வந்தடைதல் கண்டாமே.

பூரண சிவ ஆகமங்கள் அறியாதே - நிறைவுடைய சிவ ஆகமங்களை அறிந்து (உணர்ந்து) அனுபவியாமல், (அதற்கு மாறாக);

பூணு முலை மாதர் தங்கள் ஆசை வகையே நினைந்து - அணிபல அணியும் குயங்களை யுடைய அரிவையர்கள்பால் அளவிறந்த மோகத்தையே நெஞ்சில் கொண்டு;

போகம் உறவே விரும்பும் அடியேனை - புணர்வியல் தொடர்பு ஒன்றையே (இரவும் பகலும்) ஆவலிக்கும் அடிமை யான என்னை;

(நீ தயவதாய்.........விளங்க)

நீ தயவு அது ஆய் இரங்கி - நீ இரக்கம் கொண்டு, தயா மூல தர்ம சொரூபமாகி;

நேச அருளே புரிந்து - அன்புடன் (புனித) கருணை புரிந்து, (அதன் பயனாக);

நீதி நெறியே விளங்க - நியதி (சமய) நெறிகள் (முதலியன அறிவிற்கு) விளங்க;

(ஆதரவதாய்.........அருள்வாயே!)

ஆதரவு அது ஆய் வருந்தி - (உன்பால் வர வர) அன்பாகி, (பிரிவு தாங்க முடியாமல்) வருந்தி;

ஆதி அருணேசர் என்று - முதன்மை அருணை யதிபர் என்ற பெயருடன்;

ஆளும் உனையே வணங்க அருள்வாயே - ஆட்கொள்ளும் உன்னையே வணங்குமாறு (பரம) திருவருளைப் பாலித்தருளும், (எ - று).

விரிவுரை.

பரனும் பறையும் அநாதி. அந்த சந்நிதியி லிருந்து உதயம் ஆனவள் அநாதி.

மற்றவாதம சொததை, மயககுவித்துத தாம் கவர்ந்தோர்,
மற்றவர்முன் கொள்ளைபோய், மாய்ந்தொழியச் சாய்ந்தனரே.

மசபெரும் மாயைகள், அவளில் இருந்தே மலர்கின்றன. அதனால் அத்தேவியை, மகமாயி என்று அறிகிறோம்.

அநாதியானது ஆன்மா; செம்பில் களிம்புபோல், ஆன்மாவில் இயல்பாகவே ஒரு அழுக்கு இருக்கிறது. அதன் பெயர் ஆணவம். அதனுடன் வாசனையான சஞ்சிதமும் வளர்ந்தது; இந்த இரண்டும்கூட அநாதி. கால வரம்பு இல்லாத ஒன்று அநாதி யெனப்பெறும். இவைகளால் இருளும், மறதியும், துன்பமும் பெருகி, இடரடைகிறது உயிர்.

அதை அறியும் ஆதி சக்தி, ஆன்மாக்கள் பால் இரக்கம் கொள்கிறாள். இருக்கும் அழுக்கைக் கழுவி ஒழிக்க, மலரும் தன் மாயையில் இருந்து, உடலை யளித்தாள்; மனம் புத்தி சித்தம் அகங்காரம் முதலிய கரணங்களை, மலரச் செய்தாள். உறவு பூண்டு உய்தி பெற, உலகை உதவினாள். அனுபவிக்கும் சூழ்நிலைகளை, ஆயிரம் ஆயிரமாக மேலும் அருளினாள். அந்த அருமை யறிந்தே, அம்மா! அம்மா என்று, அகில சராசரமும் அவளை அழைத்துக் கொண்டே யிருக்கின்றன. இதனால் அம்பை என்ற ஒரு அற்புத நாமமும் எய்தினாள்.

பசுமை ஒளி எங்கும் பரவ வருவாளை, தேவி யென்று தினமும் ஏத்துவம். (திவ் - ஒளி.)

இத்தேவியின் அருள்களை அறிந்து, சிவனார் ஆனந்தம் கொள்கிறார்.

ஆன்மாக்களின் வினையளவை அளந்து, அவைகட்குத் தக்க தனுகரண புவனங்களை, அனுபவிக்கும் சூழ்நிலைகளை அருள்கின்றாள். இங்ஙனம் உருவாக்கி, பல உதவி புரிந்து, அனைத்தையும் தன்னில் ஒடுக்கிக் கொள்ளும் அம்மையை, 'சிவனார் மகிழ்ந்த ஆவுடைய மாது' என அறிந்து மகிழ்வம்.

(ஆவுடைய மாது - ஆன்மாக்களின் தாயான தலைவி.)

விஞ்சி இறுமாந்து, வீண்போது போக்கினர்க்கு,
அஞ்சிப் பதுங்கி, அலமருநாள் வந்துறுமே.

சிவனார் மகிழும் சிவஞானச் செல்வியை, 'ஆவுடைய மாது' எனலுமாம். (ஆ - சிவஞானம்.)

சிவனார் சத்; ஆவுடைய மாது சித்; அந்த இருவர் கலப்பில் விளைந்த ஆநந்த சொரூபம், குமரோதயம். இறவாப் பெருமான்; என்றும் பதினாறு ஆனவன்; அழுக்கில் இருப்பார்க்கு விடுதலை யளிப்பவன் எனும் பொருள்களை யுடையது குமரநாமம்; பேரருள் செல்வம், அப்பெயருடன் பெருகுகிறது. ஆதலின், ஈச நாமத்தை அதனுடன் இணைத்து, குமரேசா! என்று உம்மைக் கூவி யழைத்துக் கும்பிடுவம்.

அருளும் ஒளியும், சிவனென நின்றது. கல்லால் மர நிழலில், தென்திசை நோக்கி அமர்ந்தது. சனகாதி முனிவர் கட்கு, வாய்திறவாதே உபதேசத்தை வழங்கியது என்று, அரிய அருள் நூற்கள் அறிவிக்கின்றன.

அச் சிவபிரான், நிமலர் எனப்பெறும் நேர்மையர். எவர் செவியும், ஓம் உருவம் போலுளது என்பர் உலகர். சிவனார் திருச்செவியோ, ஓம் உருவாகவே திகழ்கிறது. குமரோதயத்தின் பின், குருசீடக் கிரமத்தைக் குவலயம் உணர, திருவுளங்கொண்டார் அத் தேவதேவர்.

ஓம் குமாராய நமஃ என்று, ஓயாது உருவேற்ற லாயினர். அவர் எதிர் நின்றீர். அவரது ஓம் உருவத் திருச்செவியில், ஓம் பொருளை ஓதினீர்!

அதன்பின், அகரமே வள்ளியார்; உகரமே தேவயானை; மகரமே வேல்; விந்து எனும் ஒளியே மயில்; நாதமே சேவல்; இவைகளின் பொருள் யாம்! அறிமின்கள் என்று, கனிவிக்கும் சுய சொருபம் காட்டினீர்!

வேத வடிவர் சிவபிரான். வேத மந்திரப் பொருளர் நீர். மந்திர சாயை மயில்! மந்திர ஞான சக்தி வேல். சபாஷ். அந்த அருமையை யறிந்தே,

---

பேராண்மை, சான்றாண்மை, பேசும் பெருஞ்சீலம்
நேரா; நியதியழி நீசரிடம் எனறறியே.

உபதேச - நேர்மை சிவனுர் திகழ்ந்த காதில் உரை வேத
மந்த்ர ! நீல மயில் ஏறிவந்த வடிவேலா !

என்று, போற்றி யோகிகள் புளகிக்கின்றனர்.

உம்மை யடையும் நெறியை, அனுபவிக்கும் வழியை, ஆகமங்களும் மறைகளும் அறிவிக்கின்றன. அந்த அறிவிப் பின்படி, சிவயோக ஞானிகள், நிர்விகல்ப சமாதியில் நிலேத் தனர். அவர்கட்கு, சதுர்யுக இறுதியான ஊழிக்காலம், ஒரு கண காலம் ; இப்படி எத்தனேயோ யுகாந்தங்களே அறிந்தவர் கள் அவர்கள்.

'ஓதுமறை ஆகமம் சொல் யோகமது வேபுரிந்து
ஊழி யுணர்வார்கள் '

ஆன அவர்கட்கும், சஞ்சித வினே சாய்ந்ததில்லேயே. (யோகம்- உள்முகக் கூட்டுறவு.)

அது கருதி, அவர்கள் மெய்யெனும் திருமேனியில் மெய் யாயினீர் ! நாசியின் சுவாசத்துள் கலந்து நடமாடினீர் ! அருள் நாதக் கேள்வியைச் செவிக்கு அளித்தீர் ! சிவஞானக் கண் வாழ்வைச் சிறக்கச் செய்தீர் ! பேசா அநுபூதியில் அவர்களேப் பிணேத்தீர் !

மேலும் சஞ்சித கன்மங்களே ஊதி ஒழிக்க, ஊதிமலேமேல் உகந்து இருக்கிறீர் ! பெருமையிற் சிறந்த பெரிய பொருள் எனப் பெறுபவரே! கேண்மையேன விண்ணப்பம் கேட்டருளும்.

மண் நீர் நெருப்பு காற்று விண் என அமைந்த பூதங்கள் ஐந்து. அவைகள் ஒன்றுடன் ஒன்று கூடி உண்டான உடல் இது, பூத பௌதிகம் எனப் பெறும். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் எனும் ஐந்தும், இந்த உடலில் இருக்கின்றன.

ஊறு எனும் மெய்யறிவு, தொடும் இன்பம் கருதித் துறு துறுக்கிறது ;

எந்த இடையூறு எய்திடினும், அஞ்சாது
கந்தசிவ எனமைதயெனில், கம்பீரம் வந்துறுமே.

சுவையெனும் வாயறிவு, பலசுவை யின்பம் எண்ணிப் படபடக்கின்றது.

ஒளி யெனும் கண்ணறிவு, காட்சி யின்பம் காணக் கதகதக்கிறது.

நாற்றம் எனும் நாசியறிவு, மணத்தின்பம் கருதி, மடமட வென விரைகிறது.

ஓசையெனும் செவியறிவு, இசையின்பம் எண்ணி ஏமாந்து போகிறது.

பொய்த்துப் போகும் போலி யின்பத்தைப் புந்தியில் விரும்பி, ஒவ்வொரு துறையை நோக்கி இந்த ஐந்தும் ஓடுகின்றனவே! நினைத்தவை ஒவ்வொன்றும் நிறைவேற, அல்லும் பகலும் அடியேன் அலைந்த பரிபவத்தை, யாரிடம் சொல்லி ஆறுவேன்?

'பூதம் அது ஆன ஐந்து பேதம் இடவே அலைந்து' திரிவது வேண்டாவே!

இந்த வாழ்க்கையில், இருக்கும் குறைகட்கு எல்லையே யில்லையே.

காமிகம் முதல் வாதுளம் ஈறுக, இருக்கும் சிவாகமங்கள் இருபத்தெட்டு. ஞான, யோக, கிரியை, சரியை யெனும் அரிய நாற்பாதங் கூறும் அவைகள், வழிபாட்டு முறையைப் பல கோணத்தில் வகுத்திருக்கின்றன. குறைவு ஒன்றும் இல்லாத நிறைவு நெறி அதுதான்.

எத்தனை சன்ம பாபமோ, எவர் இட்ட சாபமோ, அவை களை அறியும் ஆர்வங் கொண்டிலேன்;

'பூரண சிவாகமங்கள் அறியாதே'

மாதர்களையே மனத்தில் மதித்தேன். அவர்கள் ஆபரணங்களில் அறிவு மயங்கினேன். குயங்களைக் கண்டேன்; அறிவு குமைந்தேன்.

இம்மைநலம், விண்ணினபம், இன்னமைதி யெண்ணுதியேல், செம்மை மனமே! நீ சிவசிந்தை செய்வாயே!

கயல் போலும் கண்களென்று, சொக்கி நிற்பேன்; வள்ளையிலை போலும் செவிகள் என்று, வருணிப்பேன்; குமிழம்பூப் போன்ற நாசி யென்று, குதூகலிப்பேன்; பவள வாய்; முத்துப்போன்ற முறுவல்; அதர சுகம்; அடடா! என்று, நாவில் நீர் ஊற நவில்வேன்.

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும், ஒண்தொடி கண்ணே உள" என்று வள்ளுவரே கூறுகின்றாரே என்று வாயாடுவேன். இப்படியே

'பூணுமுலை மாதர் தங்கள் ஆசை வகையே நினைந்து,' கெட்டழிந்த இப் பேதை மதியை என்னென்பது?

பாவையரைக் கண்டால், அவர்களைப் பரமேஸ்வரியாகப் பாவிக்கலாம்; அது இயலாத மட்டரகமான மனமாயின், அதிகம் அணுகாமல் ஒதுங்கிப் போகலாம். யானோ இரண்டும் செய்திலன்;

'போகமே விரும்பும் அடியேனை,'

எண்ணும்போதே நெஞ்சம் இடிகிறதே! உய்வேனோ நான் உய்வேனோ, உமையாள் மகனாய் ஆள்வானே!

இவ்வளவு மோசமாக இருந்தும், எனது முன்னை நல்வினையோ, ஆன்றோர்தம் ஆசியோ, என்பால் உமக்கு இரக்கம் பிறந்தது. அதன மூலம், உமது புனித அருள் நேசம் புரிந்தது. அதன் வழியே எது நீதி? எது அநீதி எனபது தெரிந்தது; மேலும் அறிவு நெறி, உணர்வு நெறி, அருள் நெறி எனப் படிப்படியாக, அரிய சத்மார்க்கம் எனும் வித்தக சமய நெறியும் நன்றாக விளங்கியது.

'நீ தயவது ஆய் இரங்கி, நேச அருளே புரிந்து, நீதி நெறியே
விளங்க,'

அதன் வழியே உம்பால் அன்பு உதிததது.

உள்ளத்தை ஏய்த்து ஒருகருமம் செய்தாலும்,
துள்ளி யறக்கடவுள், வாழ்வைத் துளைக்குமரோ.

'அன்பென்பது ஒன்றின் தன்மை,
அமரரும் அறிந்த தன்றால் ''

என்பர் ஆன்றோர். எனவே அன்பு என்னும் ஒன்று, சொல்லளவில் சொல்லி முடியும் ஒன்றன்று; அன்பு உதயமாயின், ஞானக்கனல், கனகன என்று கனலுமே; அக் கனல் நடுவில், கடவுட் காட்சி. ஆ! ஊன்றி யிதனை உணரும் போதே உள்ளெலும்பின் உள்ளெல்லாம் உருகுகின்றதே! (சிவசிவ சிவசிவ!)

ஆம். இங்ஙனம்,

ஆதரவதாய் (ஆதரம் - அன்பு; அது - பகுதிப்பொருள் விகுதி.

உள்ளந்தானின்று உச்சியளவும் நெஞ்சாய், உருகாதால்;
' உடம்பெல்லாம் கண்ணாய், அண்ணா
வெள்ளந்தான் பாயாதால்;
கண்ணிணையும் மரமாம், தீ வினையினேற்கே ''

என்று திருவாசகம் தெரிவிப்பதுபோல், அத்தெய்வக் கனலில் கலந்து, அன்பு வெள்ளத்தால் ஈர்க்கப்பெற்று, அருட்கடலில் ஆழ்ந்து இன்புறும் காலம் என்றேயோ? என்னும் ஏக்கம் எழுகிறதே! 'ஆதரவதாய் வருந்தி ' அலைமோதுகின்றேனே!

ஆதியான சிவந்த அழற்பிழம்பர், அந்த ஞானத் தீவண்ணர். அப் பெயருடன், பரிபாகம் மிக்க பக்தர்களை ஆளாக்கிக் கொள்ளும் உம்மை, வணங்கும் வாழ்வுதான் வாழ்வு.

'' கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் ''

என்று பெரிய புராணமும், இத்தகைய அடியார் மன நிலையை அறிவிக்கும் செய்தி, இங்கு நினைவில் எழுகிறதே.

' ஆதி அருணேசர் என்று
ஆளும் உனையே வணங்க அருள்வாயே '

உள்ளத்தில் பண்பும், ஒழுக்கத்தின் தூய்மையுமே
வெள்ளம்போல் இன்பம் விளைவிக்கும்; காணீரே!

ஏதேதோ காரியம் கருதிக், கண்டவாக்குக விக்கவிடுத்து கதை போதும்! குமரேசா! வேதமந்த்ர! வடிவேலா! பெருமானே!

' ஆளும் உனையே வணங்க அருள்வாயே '

என்று வீழ்ந்து வணங்கி விண்ணப்பித்தபடி.

மற்றுமொரு குறிப்பு :

நீ தயவதாய் இரங்கி, நேச அருளே புரிந்து, நீதி நெறியே விளங்க எனக்குச் செய்த உபதேச நலம், சிவனார் இருசெவி மீதிலும் பகர்ந்த வேத மந்திரமேதான். எனவே அவர் பெற்ற உபதேசமே அடியேனும் பெற்றேன்.

அதன்பின், எல்லாம் தெரிந்ததுபோல் வாயாடிப் பேசும் போலிக் கௌரவத்துள் புகுந்து கொள்ளாமல், அல்லும் பகலும் சாதனை செய்தேன் ; அதன் பயனாக, ஒரு நாள்,

அருணகிரீ! என்று, அடியேனை அழைத்து ஆண்டீர்; என்ன வியப்பு! நீர் தானே அநாதி அருணகிரி! என்று, உம்மை வணங்குமாறு அருள் புரியும் எனவும் ;

ஆதி அருணேசர் உருவில் வந்து, ஆட்கொள்ளும் உம்மையே வணங்க அருள்புரியும் என்றெல்லாம் பொருள்கொள நின்ற பாடல் இது.

மேலும் அருணையைக் குறிக்கும் மற்றுமொரு பாடலிலும்,

' ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே ' என்பது இங்கு எண்ணத் தகும். ஊதி வினையொழிக்கும் இவ்வூதி மலைத் திருப்புகழை,உணர்வார் உள்ளம் உருகலுறும்; இன்பவெள்ளம் பெருகலுறும்! வாழ்க ஊதிமலை!

வாழ்க திருப்புகழ் வளம் !

ஓம்.

சவமான வாழ்விதனில், சங்கடங்கள் தோன்றும் ;
சிவமாகி நின்றே, சிறப்படைக என்மனமே !

முழுதும் செய்யோன்

[கி. வா. ஜ.]

' வெய்ய வினையினால் வந்த இந்த வாழ்வு வினை ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது என்பதைத் தெளியாமல், இதனை மெய்யானதென்றே நம்பி அலைகிறேனே; இது தகுமோ?' என்று புலம்பிய அருணகிரியார், முருகனை விளித்து இந்தக் குரலை எழுப்புகிறார்.

முருகனுக்குச் சேய் என்பது ஒரு பெயர். அதற்குச் செம்மை உள்ளவன் என்பது பொருள். இப்போது அருணகிரியார் முருகனை ஏறெடுத்து நோக்குகிறார் வாழ்வின அல்லல்களால் அலைசிப் போனவர் தம் அச்சத்தைத் தீர்க்கும் ஆண்டவனை அணுகி, அவன் அஞ்சேல் என்று சொல்வானா என்று ஆர்வத்தோடு பார்க்கிறார். அஞ்சல் என்று குறிபபது திருக்கரத்தின் வேலை. அபயமும் வரதமும் உடைய திருக்கரங்களை உடையவன் ஆண்டவன். அக் கரங்கள் சிவந்த தோற்றம் அளிக்கின்றன. செந்தாமரை மலர்களைவிடச சிவந்தன அவை. அவற்றைக் கண்டு, ''கரங்கள் சிவந்த பெருமானே!'' என்று துதித்தார்.

ஆண்டவன் திருக்கரததில் வடிவேல் ஒளிர்கிறது. அதுவும் சிவப்பாக இருக்கிறது: திருக்கரத்தின் செம்மை படிநதது அது சிவப்பாயிறறா? அசுரர்களின் உடலிலே புகுந்து அவ்வுடலங்களின் குருதி படிந்து சிவப்பாயிற்றா? அனறி மாணிக்கம் பதித்ததனால் செஞ்சுடர் வீசுகின்றதா? எல்லாக் காரணங்களும் இஙகே பொருததந்தான. அந்தச செஞ்சுடர் வேலை தலை முதல அடி வரையில் பார்க்கிறார். ஒரே சிவப்பு: வினை வாழ்வினால் உண்டாகும் அச்சத்தைப் போகக அஞ்சல் என்று காட்டும் கரமுடைய ஆண்டவன், அந்த வினையை நீக்கும் கருவியைத் தன் திருக்கரத்தில வைத்திருக்கிறான். அது புறத்தோற்றத்துக்கு வேலாகவும் அகக் கண் பார்வைக்கு ஞானமாகவும் இலங்குகிறது. அசுரர்களை மாய்த்து நலம் செய்த அந்தவேல் அநாசார சம்பததுக்களாகிய தீய குணங்களை

உயர்வின்பம், மோனநிலை, ஞானிகளால் உண்டாம்;
மயலகன்றே, அன்னவர்தாள் மன்னுகநீ; என்சிரமே!

அழித்துவிடும். புற இருளும் அக இருளும் நீங்கச் செம்மை ஒளி பாரிக்கும் வடிவேல் அது ; ஞானசக்தி அது.

ஞான வேலாயுதத்தைக் கண்ணாரக் கண்டு, "செவ்வேற் பெருமானே!" என்றார். வேலினுடைய அடி வரையில் கண்டவர் அதன் வழியே முருகன் திருவடியையே அணுகினார். வடிவேல் முருகனுடைய அடிமுதல் முடியின்காறும் சார்ந்து நின்று, பார்க்கும் அன்பர்களுடைய பார்வைக்கு ஏணியாக உதவும். அருணகிரியார் கையைக் கண்டு, அது பற்றிய வேலைக்கண்டு, அதன் வழியே பார்வையை இறங்கச் செய்து முருகனுடைய கழலைக் காணுகிறார். கை சிவப்பு, வேல் சிவப்பு, இப்போது தரிசிக்கும் திருவடியும் சிவப்பு. கோலப் பிரவாள பாதம் அல்லவா?

தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும் சுத்த ஞானம் எனும் தண்டையம் புண்டரிகம் அது. புண்டரீகத்தினும் செக்கச் சிவந்தகழல் அது. முருகன் திருவடியிலே வண்டாகச் சென்று பார்க்கிறது கண். நெஞ்சமோ அந்தத் தாமரையிலே ஊறும் ஆனந்தத் தேனை உண்டு மயங்கிக் கிடக்கிறது. கையிலும் வேலிலும் இல்லாத இன்பம் அங்கே கிடைக்கிறது. கை முதலில் அச்ச உணர்ச்சியைப் போக்கியது. பிறகு வேல் அச்சத்துக்குக் காரணமான தீமையை ஒழித்தது; இப்போது தீமை ஒழிந்து திருவடியிலே படிந்தபோது எங்கும் காணாத பேரின்பம் கிட்டுகிறது.

மெல்ல உணர்வு வந்து, "செங்கழற் பிரானே!" என்று துதித்தார் அருணகிரியார். அவன் கை சிவந்தவன் ; வேல் சிவந்தவன் ; கழல் சிவந்தவன். இப்போது அவனுடைய திருமேனி முழுவதையும் ஏறிட்டுப் பார்க்கிறார். எல்லாம் ஒரே சிவப்பாகத் தோன்றுகிறது. ஆண்டவன் செய்யன். குங்குமத்தை ஒத்த திருமேனி யுடையவன். செக்கச் சிவந்த பிள்ளை. 'இவன் கை சிவப்பு, வேல் சிவப்பு, கழல் சிவப்பு என்றல்லவோ சொன்னோம்? இவன் திருமேனி முழுவதும் சிவப்பாக இருக்கிறதே!' என்று அருணகிரியார் வியந்தார். "பவளத்தன்ன மேனி" என்று சங்க நூல் போற்றும் எழில்

அறிவும், அழகும், அருளும், பொருளும்,
செறிவும், சிவனருளைச் சிந்திப்பார்க் கெய்துமே

வண்ணத் திருமேனி அல்லவா? "மேனி முழுவதும் செய்ய வனே!" என்றார்.

கையோ, அயிலோ, கழலோ, முழுதும்
செய்யோய்!

என்று துள்ளினார்.

அவர் பார்வை முருகனைச் சார்ந்து நிற்கும் பச்சை மயில் மேல் படர்ந்தது. கண்ணைக் குளிர்விக்கும் பச்சை வண்ண முடையது அது. அதைத் தனியே பார்த்துப் பின்பு முருகனோடு சேர்த்துப் பார்த்தார். ஆ! இப்போது முருகன் அழகு இன்னும் எவ்வளவு சிறப்பாக விட்டு விளங்குகிறது! மயிலாகிய பச்சை நிலைக்களத்தில் முருகனுடைய செம்மேனி பின்னும் நன்றாக ஒளிவிட்டது. மயில் ஏறிய பெருவீரனாக, மயிலேறிய சேவக னாகத் தரிசித்த போது, அவன் அழகு மிகமிகச் சிறப்பாகக் கண்ணையும் கருத்தையும் கவ்வுவதாக இருந்ததை உணர்ந்தார். இந்தச் சேவகன—வீரன-வினைகளை அழிதது, வாழ்வை நிறை வுறுத்துவான் என்ற நம்பிக்கை பிறந்தது. வினையோட விடும் செங்கதிர் வேலவன் துணை நின்றால எதுதான் கிடைக்காது?

மெய்யே எனவெவ் வினைவாழ் வைஉகந்து
ஐயோ! அடியேன் அலையத் தகுமோ?
கையோ, அயிலோ, கழலோ முழுதும்
செய்யோய்! மயில்ஏ றியசே வகனே.

பொய்யானதும் வெம்மை யானதுமான இந்த உலக வாழ்வை, இது மெய்யானதுதான் என்று மனமகிழ்ந்து, மேற் கொண்டு அடியேன் பிறவி பிறவியாக அலைவது தகுதியா" ஐயோ! கைமட்டுமா? வேல்மட்டுமா? கழல் மட்டுமா? திருமேனி முழுதும் சிவந்த நிறமுடைய பெருமானே! மயில் மேல் ஊர்ந்து வரும் பெரு வீரனே!

(உகத்தல் - மகிழ்ந்து மேற்கொள்ளல். கையோ முதலிய ஏகாரங்கள் எண்; கையும் அயிலும் கழலும் என்ற பொருளை யுடையன. சேவகம் - வீரம்.)

இது கந்தர் அநுபூதியில் 25-ஆவது பாட்டு.

பக்தியொடு மெய்ம்மைப் பரம்பரனை யெண்ணுகின்றோர்,
முத்தித் தலத்தின், முதல்ஆ சனத்தவரே.

எல்லாம் உனக்காக !

(ஆ. கி. ரங்கராஜன்

சென்ற இதழ் தொடர்ச்சி—

வேலை செய்தால் கூலி உண்டு. இறைவன் தலைவன்; நீ வேலையாள். இக் கருத்தைக் கொண்டு செயல் புரிவா யாகில், இறைவன் மகிழ்ந்து வேலைக்கேற்ற ஊதியத்தையும், அதோடு வெகுமதிகளையும் வழங்குகின்றான். நீ இன்பமாக வாழவேண்டு மென்பதே இறைவனின் விருப்பம். நீ தவறாக நடந்து கொண்டால், இறைவன் உன்மீது அதிருப்தி கொள் கின்றான். அத் தவறை உணர்ந்து, நீ இறைவனை சரணடைந்த போது, மன்னித்து அன்பு கொள்கின்றான்.

சுற்றுப்புறப் பொருள்களை எல்லாம், உனக்காகத்தான் இறைவன் அருளி யிருக்கின்றா னெனினும், அவற்றை அடையும் வகையை யறிந்து, நீ அவற்றை அடையவேண்டும். வகை தப்பி முயன்றால், அவைகள் உனக்குக் கிட்டாமற் போவதுடன், துன்ப மனுபவிக்கவும் நேரிடும். அதை நீ உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

தட்டு நிறைய தின்பண்டங்கள் வைக்கப்பட்டிருக்கின் றன. அவை எல்லாம் உனக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. யார், எப்போது, ஏன் வைத்திருக்கிறார்கள் என்ற அதன் காரணத்தை அறியாமல், நீ அதனை எடுத்துக் கொள்ளக் கூடாது. நீ செய்யும் தொழில்களாலும், ஒழுக்கத்தாலும் உயர்ந்தனையாயின், உனக்கு இன்றியமையாததொரு பொருளை நீ விரும்பாவிடினும், அப்பொருள் வலிய வந்து உன்னை அடையும்.

* * * * * * *

ஆன்றோர்கள் சொன்ன அனைத்தும் அறமாகும்;
ஊன்றி உணர்ந்தால், உயரும்நம் வாழ்க்கையரோ.

சூர்யகுல மன்னர்கள் அயோத்தியை ஆண்டனர். அற நெறியில் சிறிதும் அவர்கள் வழுவாது அரசு புரிந்தனர். பறவை யொன்றுக்கு அடைக்கல மளித்த வாக்குறுதிக்காகத் தன் உடல், உயிர் அனைத்தையுமே தியாகம் செய்தனன் சிபி. அவனை வலிய வந்தடைந்தது அழியா இன்ப நிலை. பகீரதன் தான்செய்த தவ சாதனையால், கங்கையைப் புவிக்குக் கொணர்ந்து, இதிகாச புராண நூல்களில் அழியாத புகழை அடைந்தான். இதுபோன்று, பலர் தமது சீரிய ஒழுக்கத்தினால் சிறந்த இன்பத்தையும், கீர்த்தியையும் பெற்றனர். அவர்களுள் அரிச்சந்திரன் தலைசிறந்தவன். அவன் அவனியில் தோன்றிய நாள்முதல், இறுதிவரை சத்தியத்தையும் வாய்மையையும் கடைப்பிடித்தவனென்று நூல்கள் கூறுகின்றன. ஆதலினாலேயே, ஏககாலத்தில் அமரர்களையும், திரிமூர்த்திகளையும், திக்பாலகர்களையும் காணப் பெற்றான். அண்ட பிண்ட சராசரங்களனைத்தும் அவனது ஆட்சிக்குட்பட்டதுடன், அழியா இன்பமும், அளவிலாப் புகழும் அரிச்சந்திரனுக்குக் கிட்டியது. மானிடனாய்ப் பிறந்த ஒருவன், சாகும் காலம் வரையும், சாகும் தருணத்திலும் கூட, சத்தியத்தையும், வாய்மையையும் கடைப்பிடிக்க முடியும் என்ற உயரிய உண்மையை, அரிச்சந்திர நாடகத்தைக் கண்டு உணர்ந்த மகாத்மா காந்தியடிகள், அவ்வாறே அவற்றைத் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து, இணையற்ற வெற்றி கண்டதை நோக்குமிடத்து, அரிச்சந்திரனின் கீர்த்தியை என்னென்று தான் புகழ்வது!

மகாபாரத காவியத்தின் சிறந்த புருஷரான யுதிட்டிரர், பூத உடலுடன், கண்ணனோடு விண்ணுலக யாத்திரை செய்யும் காலத்தே, யுதிட்டிரர் அரிச்சந்திரனைக் காணவேண்டு

இழிந்த நினைவுடன் என்றும் இடர் செய்யின்,
வழிபடு தெய்வமே, வாழ்வழிக்கும் நிச்சயமே.

மென விரும்புகையில், கண்ணன் அரிச்சந்திரனைக் காண இயலாது. அவன் எல்லையற்ற புகழும், ஒளியும் பெற்று விளங்குகின்றான் எனக் கூற, தர்மர் மீண்டும் கண்ணனை வற்புறுத்த, கண்ணன் இசைந்து, அனந்த சூர்யப் பிரபையுடன் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் அரிச்சந்திரன் முன்பாகத் தொங்க விடப்பட்டிருந்த திரையைச் சற்று மேலே தூக்குகையில், தர்மரின் பார்வை, அரிச்சந்திரனின் பாதங்களில் பட்ட அளவில், ஒளி மிகுந்த அக் கழல்கள் ஒளியை இழந்து கரிய நிறமாகியதை நோக்குமிடத்து, அரிச்சந்திரன் எய்திய சிறப்புதான் என்ன !

அம்பரீஷன் சூர்யகுல மன்னன். ஏகாதசி விரதத்தைக் கடைப்பிடித்தான். அதைத் தூர்வாசர், குலைக்க முயன்று தோல்வி கண்டார். அம்பரீஷன் ஒரு சமயம் வேள்வி ஒன்று இயற்றினன். அதற்குப் பலி இடப்படும் பிராணியை இந்திரன் மறைத்தான். தயங்கிய அம்பரீஷன், பிறவிகளில் உயர்ந்த உயிர் ஒன்றை வேள்வியில் அர்ப்பணம் செய்ய வேண்டுமென்ற வசிட்டரின் யோசனைப்படி, பிறவியிலும், குல ஒழுக்கத்திலும் உயர்ந்த ரிசீகர் எனும் அந்தணரின் நடுப் புதல்வனை சுனச்சேபனைக் கொணர்ந்தான். சுனச்சேபன் பெரும் உத்தமன். ரிசீகருக்கு மூன்று புதல்வர்கள். மூத்தவனைத் தந்தையும், கடைசிப் புதல்வனைத் தாயும் விரும்பினர். அதனை அறிந்த இரண்டாவது புதல்வனாகிய சுனசசேபன், தான் தன்னைத் தியாகம் செய்வதால், அன்னை தந்தையர் நல்வாழ்வும் உயர்வும் பெறுவர் எனத் துணிந்து, அம்பரீஷனுடன் தொடர்ந்தனன். வழியில் விசுவாமித்திரர், அவனுக்கு சிறந்த உபதேசம் செய்தார். வேள்விக்கு அர்ப்பணம் செய்யும் சடங்குகளைத் தொடங்குகையில், தேவர்கள் தோன்றி, சுனச்

ஏமாற்றி மக்களிடம், என்றும் பணம்பறிப்பார் ;
சாம்போது தம்தவறை, எண்ணிமனம் சாம்புவரே.

சேபனை ஆசீர்வதித்து. நீண்ட ஆயுளும், ராஜ்ய போகமும், சகல சுகங்களும் அடையுமாறு பணித்தனர். இது வால்மீகி ராமாயண வரலாறு. இது சுனச்சேபனின் உத்தம குணத்தால் பெற்ற பேறு ஆகும்.

* * * * * * * *

பேராசை, பொறாமை முதலிய பல தீய குணங்களைக் கைவிட்டு, நிம்மதியையும், பிற உயிர்கள்பால் அன்பையும் கொள்ளுதலும், இறைவனையும் இறைவனடியார்களையும் போற்றுதலும், ஏழை எளியோரை ஆதரித்தலும், பெரியோரை வணங்குதலும் உன் கடமைகளில் முக்கியமானவை யாகும். பிறர்மனை நயத்தலும், பிறர் பொருள் பறித்தலும், உயிர்கட்கு ஊறு விளைத்தலும் நீ செய்யத் தகாதவையாகும்.

உத்தம குணங்களாலும், செயல்களாலுமே உயரிய சுகத்தையும், உரிய பொருள்களையும் பெருமையையும் அடைய முடியும். வஞ்சகத்தாலும், கோபாவேசத்தாலும், துவேஷத்தாலும் எதனையும் சாதித்துவிட முடியாதென்பதையும், அப்படி சாதித்தாலும், இறுதியில் இழிவெய்தி அழியும் நிலையே ஏற்படும் என்பதையும், இதிகாச, புராண, சரித்திர வரலாறுகள் கூறுகின்றன. ஏன் ? நமது பகுத்தறிவே நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

நீ உத்தமனாகி விட்டால், கெட்டவைகள் அனைத்தும் நல்லனவாகி உன்னை வந்து அடைகின்றன. இதனால் இறைவனின் படைப்புகள் அனைத்தும் உனக்கு உரியன என்பதில் ஐயம் உண்டோ ?

நல்வழியில் வாழ்க்கை, நயம்செய்து வாழ்வாரை,
அல்வழியில் கால்தட்ட, ஆயிரம்பேர் உள்ளனரே.

உபநிஷதங்களின் உள்ளொளி

(ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி)

கல்வியிலும் விஞ்ஞானத்திலும் பொருளாதாரத்திலும் மிக மிக முன்னேறியிருக்கும் மேலை நாட்டு மக்களில் பெரும்பாலோர் தம்தம் வாழ்க்கையில் ஓர் இலக்ஷியம் இன்மையினுல், வாழ்க்கையில் ஓர் வெற்றிடத்தை, ஓர் சூனியத்தைக் காண்கின்றனர். அவர்களுடைய அகமனம் ஏதோ ஒன்றை இழந்துவிட்டது போல் தவிக்கிறது. ஏதோ ஒன்றைப் பெற அவர்கள் துடிக்கின்றனர். ஆனுல் எதைப் பெற வேண்டும் என்று கேட்டால் அவர்களால் பதிலுரைக்க இயலுவதில்லை. இப்படி அக ஊசலாட்டம் காரணமாக அந் நாடுகளில் மனநோய் மிகுந்திருப்பதாக வைத்திய சாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றனர். இது மேல் நாட்டு நிலை.

நம் நாட்டின் நிலையை எண்ணிப் பார்ப்போம். குடிசையில் வாழ்ந்து போதுமான உடை, உணவு, வசதிகள் இவை இல்லாது இருந்த காலத்திலும் தங்கள் உள்ளத்தில் ஓர் நிறைவை நம் மக்கள் அனுபவித்தனர். தம்மைத் தாம் அறிந்து, அடக்கமான வாழ்க்கை, அத்தியாவசியமான புறச் செயல்கள் இவற்றுடன் வாழ்க்கையை நடத்தி வந்த நம் முன்னோர்கள், ஓர் பெரும் இலக்ஷியம் படைத்தவர்களாக வாழ்ந்தனர். ஒரு குறிப்பிட்ட கால வரைக்குள் தம் உலகக் கடமைகளை முடித்துப், பின் தம்மில் ஒழிந்திருக்கும் தனிப் பொருளைக் காணும் முயற்சியில் ஈடுபட்டதால், அவர்கள் வாழ்க்கையில் வெற்றிடம் ஏதும் தென்படவில்லை. நிறைவுடன் அமைதியாக வாழ்ந்தனர். தமக்குள் ஓர் உயர்ந்த உண்மையைக் கண்டனர். தாம் கண்டதைப் பின்வரும் மக்களும் காணட்டும் என்று, தம் ஆராய்ச்சி முடிவுகளை நூல்

சகத்தில் பலவான சாமர்த்யம் உண்டு:
அகத்துக் குறையை, அகற்றுவதில் இல்லையரோ

களாக எழுதி வைத்தனர். அவை தாம் உபநிஷதங்கள் என்ற ஒளி விளக்கு. இது பண்டைய நிலை. இன்று நம்மவர் நிலை இப்படி இல்லை. நாட்டின் பல பகுதியிலும் வாழும் மக்களின் மனோ வேகத்தைக் காணுகையில் நம் முன்னோர் நாட்டிய வழியை விட்டு நாம் எத்துணை தொலைவு எட்ட வந்துவிட்டோம் என்பது நன்கு புலனாகும். அகில உலக மக்களுக்கும் நல் வழியைப் பக்குவமாகப் பகர வல்ல பெரியோர்கள் வாழ்ந்த இந் நாட்டில் இன்று எத்தனை அமைதி இன்மை? மக்களுடைய மனத்தில் எத்தகையதொரு குழப்பம்? வாழ்க்கை இலக்ஷியம் ஏதுமற்ற ஓர் வெற்று ஓட்டம் ஆய்விட்டது. மேல் நாட்டவர் விஞ்ஞானத்தில் முன்னேறியும் பின்னும் மன அமைதி பெறாது தவிக்கின்றனர். நாம் மெய்ஞ் ஞானத்தை மறந்து விஞ்ஞானத்தைப் பெற முயன்று, மன அமைதி இழந்து தவிக்கிறோம். இப்படி இரு சாராரும் தவிக்கும் இந்நேரத்தில் எது நமக்கு நல்வழி காட்ட முடியும்.

காட்டில் திரியும் கஸ்தூரி மான் தன் உடலிலிருந்து வீசும் மணம் எங்கோ புறத்திலிருந்து வருவதாய் எண்ணி அங்கும் இங்கும் ஓடி அலைந்து, ஆயாசப்பட்டு அழிகிறதாம். கழுத்தில் கிடக்கும் நகையைக் காணோமென்று எண்ணி காரிகை ஒருத்தி கண்ணீர் விட்டு அழுதாளாம். இக் கதை நமக்கும் பொருத்தம் தானோ என்ற ஐயப்பாடு எழுகிறதல்லவா. உபநிஷதங்கள் என்ற ஒளி விளக்கைக் கையிலே வைத்துக் கொண்டு ஒளிகாட்டும் பிற மின்மினுப் பூச்சிகளை நாம் ஏன் தேட வேண்டும்? அமைதியும், ஆனந்தமும் பெற உன்னையே நீ உணர் என்று ஓதும் உயர்ந்த பொன்மொழிக்குச் செவிசாய்க் காது வேறு எந்தப் பொன் மொழியைக் கேட்க வேண்டும்? உபநிஷதங்களின் உட்பொருளை உணர்ந்தவன் பயம், சோகம் என்ற மரணங்களிலிருந்து விடுபட்டு அமரனாகுதல் கூடும்!

பேசும் திறமிகுந்து, பேச்சில் மயங்க வைத்து,
கூசாமல் குற்றங்கள் கொள்வதுதான் என்னேயோ ?

எனவே, சிறந்த அறிவுரைகள் கூறும் இச் சீரிய நூல்களைச் சிந்தித்துச் சிந்தித்துத் தெளிவு பெறவேண்டும்.

கதோபநிஷதத்தில் நசிகேதஸ்ஸின் கேள்விக்கு விடையாக ஆத்மாவின் புராண தத்துவங்களும் கால தேவனால் விளக்கப்படுகிறது. உடலை இரதமாக ஒப்பிட்ட உவமையை மூன்றாவது வல்லியில் கண்டோம். நான்காம் வல்லியில் ஆத்மா கட்டைவிரல் பரிமாணத்தில் இதயத்தில் வீற்றிருப்பது குறிக்கப்படுகிறது. 'நான்' என்று கூற முற்பட்ட உடனேயே மனிதன் தன் மார்பினையே தட்டிக் கொள்கிறான். நான் என்று கூற முற்படும் எல்லோரும் மார்தட்டும் மாவீரர்களாகவே இருக்கிறோம். எனவே, ஆத்மா இதய வெளியில் உள்ளது எனபது பொருத்தமே. நம் சரீரத்தில் (வைத்திய சோதனைகளால் கண்டபடி) இத்யம் இடப்பககம் இருக்கிறது. அதில் வெற்றிடம ஏதுமில்லை. இந்த இதயத்தைத்தான் காலன் குறித்தானா? என்பது கேள்வி. சிறந்த அத்வைத அனுபூதிபெற்ற பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி அவர்கள் ஆத்மா வலப்புறத்தில் உள்ள சூக்ஷ்ம இதயத்தில் உள்ளது. இது என் அனுபவம் என்று கூறி, இதை உறுதிப்படுத்த நம் செயலையே உதாரணமாகக் காட்டியுள்ளார். நான் என்று கூற முற்படுகையில் நாம் நம் வல மார்பைத் தொடுகிறோமே அல்லாது இடப்புறம் தொடுவதில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். இதுபற்றிய விளககத்தை வாசகர்கள் அவரவர்கள் ஆத்மப் பயிற்சியில் கண்டுகொள்ள வேண்டும். ஆத்மாவை கட்டைவிரலளவு ஜோதிப் பிழம்பாகத் தியானிப்பது பல யோகிகள் கையாண்ட தத்துவம். 'ஏதமற நிச்சய மனோலய விளக்கொளியும்' என்பது அருணை முனிவரின் அருள் வாக்கு.

5-வது வல்லியின் ஆரம்பத்தில் மற்றொரு சிறந்த கருத்தினைக் கால தேவன கூறியுள்ளான். ஒன்பது வாயிலுடைய

கற்றார் பலநூல்; கலந்துறவு கொள்ளாமல்,
செற்றம் நிறைமனத்தர், ஆவதெவர் தீவினையோ?

இக் கோட்டைக்கு அரசஞன ஆத்மா நீரினைப்போல், நெருப்பினைப்போல், பகலவனைப் போல் எதனுலும் கட்டுப்படாது, எல்லாவற்றிலும் எல்லாவற்றிற்கும் அப்பாலும், இருக்கிறுன் என்று கூறப்படுகிறது. செயல்களைச் செய்த போதிலும் அச்செய்கைகளால் கட்டுப்படாமலும், பொருள்களைத் துய்த்த போதிலும் அப்போகங்களால் பந்தமடையாமலும் ஆத்மா இருக்கிறது. ஆத்ம ஸ்வரூப லக்ஷணத்தை மேலும் விளக்கிக் கூறுகிறுன்.

கயிற்றினில் பாம்பும், தூணில் திருடனும், காக்கைப் பொன்னில் வெள்ளியும் இருப்பதாக மேலாகப் பார்ப்பவர்கள் கூறிய போதிலும், உண்மையை ஆராயுமிடத்து பாம்பாகத் தோன்றியது கயிறுதான். திருடனுகக் காணப்பட்டது தூணே. காக்கைப் பொன்னில் கடுகளவும் வெள்ளியில்லை என்பது புலனுகும். இது போலவே அவித்யையின காரண மாக ஆத்மாவின் மீது செய்வான், செயபபடு பொருள் ஆகிய இரண்டும் ஆரோகணிக்கப் படுகிறது. க்ரியை, காரகன், பலம் (செயல், செய்பவன், பயன்) ஆகிய இம்மூன்றும் ஆத்மாவின் மீது அஞ்ஞானத்தின் காரணமாகவே ஏற்றுவிக்கப்படுகிறது என்பதை உணர வேண்டும். ஆத்மா செயல் ஏதும் அற்றது எனின், வாழ்க்கை எப்படி நடக்கிறது என்ற கேள்வி எழும் அல்லவா. அசையும் பொருள் ஒன்று இருப்பின் அதற்கு ஆதாராமாக அசையாத ஒன்று இருந்தே ஆகவேண்டும் வேகமாக சுற்றும் மின விசிறியின் கைகள், சுற்றுத நடுத்தண்டை ஆதாரமாகக் கொண்டுதான் இயங்க முடியும். தண்டு இல்லாத பக்ஷத்தில் கைகளும் இல்லை. ஆத்மாவுக்கும் அதை ஆதாரமாகத கொண்டுள்ள சித்தம், புத்தி, அகங்காரம் இவற்றுக்கும் உள்ள உறவு இது போனறதே. ஆத்மா இல்லையேல் இவை இல்லை. ஆனுல் மனம், புத்தி-

---

கற்றவர்கள், தம்போல் கற்றுர்மேல், நல்நட்பு
பெற்றிலரேல், உள்காய்ச்சல் பீடழியச் செய்யுமரோ

சித்தம் இவைகள் (விசிறியின் இறக்கைகள் போல) சுழலில் ஈடு பட்டிருப்பினும், (விசிறியின் நடுத்தண்டு போல்) ஆத்மா எவ்விதமான அசைவும் இன்றி இருக்கிறது.

நிமிடத்திற்கு நிமிடம் மாறும் பல பல காக்ஷிகளைத் திரையில் காண்கிறோம். இவற்றை நாம் காண்பதற்கு முக்கியமான ஆதாரம் பின்னால் இருக்கும் அசையாத எவ்வித வண்ணமும் அற்ற (வெண்மையான) திரைதான். திரை இல்லையேல் திரைப்படம் ஏது? ஆத்மா இல்லையேல் உலகக் காக்ஷிகள் இல்லை. இவ்வாத்மா நமக்குள் இருக்கிறது. நாம் அதுவே— அதுவே நான் என்ற உணர்வு எவருடைய உள்ளத்தில் தீவிரமாக ஏற்படுகிறதோ அவர்கள் உலகின் சோக மோகங்களால் தொடப்படாதவர்கள் ஆகின்றனர். அவர்கள் இவ் விளக்க வொண்ணாத மேலான ஆத்மானந்தத்தை, வாக்கு மனம் இவற்றிற்கு அப்பாற்பட்ட இப் பெரிய பொருளை 'ததேததிதி' 'தத்—ஏத் இதி'—'இது அதுவே' என அறிகின்றனர். இவ்வாறு ஞானிகள் அறிந்த சுகத்தை எவ்வாறு நாம் பெறுவது? இதை நாம் எப்படிக் காண்பது? அது தானே ஒளிர்கிறதா? இல்லையேல், இது வேறு ஏதேனும் ஓர் ஒளியின் உதவியினால் பிரகாசிக்கிறதா? என்ற கேள்விக்கு 4-வது வல்லியின் இறுதி மந்திரத்தில் வெகு அழகான விடை கிடைக்கிறது. ஆத்ம ஜோதி எப்படிப் பட்டது? அது எதனால் ஒளி பெறுகிறது? அது எதற்கு ஒளி தருகிறது என்பதற்கு இம்மந்திரத்தில் மிகச் சிறப்பான விளக்கம் தரப்படுகிறது. இம் மந்திரத்தைப் பலரும் பல இடங்களில் கேட்டிருக்கலாம்.

ந தத்ர ஸூர்யோ பா⁴தி நசந்த்ர தாரகம் நேமா வித்யுதோ
பா⁴ந்தி குதோऽய மக்னி:
தமேவ பா⁴ந்த மனு பா⁴தி ஸர்வம் தஸ்ய
பா⁴ஸா ஸர்வமிதம் வி பா⁴தி

ஆண்டவன்தன் பிள்ளைகள் யாவரும், என்று(உ)றவு
பூண்டார்தம் ஆண்மையைப், போற்றுவது புண்ணியமே.

அங்கு சூரியன் பிரகாசிப்பதில்லே; சந்திரனே, நக்ஷத்திரங்களோ, மின்னல்களோ ஒளிர்வதில்லை. அக்னி ஒளியைப் பற்றி இனிச சொல்லத் தேவையில்லை. ஆத்ம ஒளி உண்டானல் ஏனைய எல்லா ஒளிகளும் ஏற்படுகிறது. ஆத்ம ஒளியாலேயே எல்லாம் பிரகாசிக்கிறது.

ஆத்மா சுயம் பிரகாசமானதால் அது எவ்வகையான ஒளியையும் துணை தேட வேண்டியதில்லை. இதற்கு மாருக சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இவை ஆத்ம ஒளியாலேயே பிரகாசிக்கின்றன. நீர் அக்னியிலிருந்து சூட்டினைப் பெறுவது போல இவை ஆத்மாவிடமிருந்து ஒளி பெறுகின்றன. இங்கு ஒளி என்பது கண்ணுக்குப் புலனாகும் ஒளியை மாத்திரம் குறிக்கவில்லை. கனவிலும் நாம் பார்க்கிறோம். அப்போது எந்த விளக்கு அல்லது சூரிய ஒளி வீசுகிறது என்று யோஜித்துப் பார்க்க வேண்டும். ஆத்ம ஒளியே அங்கு ஒளிர்கிறது என்பது புலனாகும். ஆத்மாவுக்கு எங்கிருந்து ஒளி வருகிறது என்று கேட்கலாம். ஆத்மா ஒரு பொருளிடத்திருந்து ஒளி பெறுமாயின் அதற்கு ஒளியூட்டும் பொருட்கு எது ஒளி தருகிறது என்ற கேள்வி எழும். ஆத்மா சுயம் பிரகாசமானது. அதன் ஒளியாலேயே நாம் பிற ஒளிகளைக் காண்கிறோம். 'நதத்ர சூர்யோ பாதி' எனும் இதே மந்திரம் சில மாற்றங்களுடன் கீதையின் 15-வது அத்தியாயத்தில் 6-வது ஸ்லோகமாகக் கூறப்படுகிறது. முண்டக உபநிஷத்திலும் ஸ்வேதாஸ்வதர உபநிஷததிலும் இதே மந்திரம எவ்வித மாற்றமும் இன்றிக் கூறப்படுகிறது. இந்த மந்திரத்தைப் பலர் கேட்டிருக்க முடியும். நமது ஆலயங்களில், 'ஆரதி' முடிந்த பின மதசம்பந்தமான பூஜை முதலியவைகளின் இறுதியிலும் இம்மந்திரத்தை நிச்சயமாகத் திருப்பிச்

தேடிவந்து, நட்படைந்து, ஏமாற்றித் தீர்ந்தபினர்,
ஓடிப்போம் கூட்டத்திற்(கு,) இவ்வுலகில் உய்வுண்டோ.

சொல்கிறார்கள். ஆனால் இதன் பொருள் என்ன என்பதைக் கேட்பவர்களும், சொல்பவர்களும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. சூரியனின் பிரகாசத்தைக் காட்ட விளக்குத் தேவையா? அதைப் போன்றே ஆத்ம பிரகாசத்தை விளக்க வேறு ஜோதி வேண்டாம். தத்ர—அஸ்கு—என்ற சொல்லின் மூலம் ஆத்மாவின் இருப்பிடம், கேவல ஞானத்தின் உறைவிடம் குறிப்பிடப் படுகிறது. மந்திரத்தை யக்ஞங்கள், பூஜைகளின் இறுதியில் சொல்வதன் மூலம் ஜோதிகளிலெல்லாம் ஜோதியாக விளங்கும் ஆத்மாவின் சுயம்பிரகாசம் நமக்கு நினைவுறுத்தப்படுகிறது. இவ்வழகிய மந்திரத்துடன் கதோப நிஷதத்தின் 5-வது வல்லி முடிவுறுகிறது. இந்த ஜோதியை மாணிக்க வாசகர் தமது திருவெம்பாவையில் மிக அழகாகவும் மனத்தைக் கவரும் வகையிலும் துதிக்கிறார். "ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் ஜோதி" என்று. இத்துடன் கதோபநிஷத்தின் முதல் அத்தியாயம் முடிவடைகிறது.

இரண்டாவது அத்தியாயம் ஆறுவது வல்லி ஆரம்பமாகிறது. கீதையில் கண்ணன் வாயிலாக (15 வது அத்தியாயத்தில் 3 சுலோகங்கள்) வியாஸ பகவான் விளக்கும் ஓர் அழகிய கருத்தினை கதோப நிஷத்திலும் காண்கிறோம். கதோபநிஷதத்தின் மந்திரத்தைப் பார்ப்போம்.

ஊர்த்வ முல-அவாக்ஶாக^{1}-ஏஷோ அஸ்வத்த ஸநாதன:
ததே^{3}வ ஶுக்ரம் தத்^{3} ப்ரம்ம ததே^{3} வாம்ருத முச்யதே
தஸ்மிம் ல்லோகா ஶ்ரிதா: ஸர்வே தது^{3} நாத்யேதி கச்சன
ஏதத்^{3} வைதத்

பழமையான அச்வத்த விருக்ஷம் இங்குள்ளது. இதன் வேர் மேல் நோக்கியும், கிளைகள் கீழ் நோக்கியும் உள்ளன. இது பரிசுத்தமானது. இதுவே பிரம்மம். இதுவே என்றும்

தன்னை இம் சிப்பாரைத், தாங்பொறுக்கும் பூமிபோல்,
தன்னை வருத்துநரை, வாழ்கென்பர் தக்கோரே.

உள்ளது. 'அம்ருதம்' என்று பேசப்படுகிறது. அதன் மீதே எல்லா உலகங்களும் தங்கி இருக்கின்றன. இதைக் கடந்து எவரும் போக முடியாது. இது அதுவே.

'அச்வத்த விருக்ஷம்' என்று குறிக்கப்படுவதன் நோக்கம் என்ன? அச்வத்த மரம் போன்று பரந்து, விரிந்து, பருத்து வளர்ந்து நெடுநாள் வாழக் கூடிய மரம் வேறு ஏதும் இல்லாததால் ஸ்ருதிகள் அச்வத்த விருக்ஷத்தையே இங்கு உதாரணமாகக் காட்டுகின்றன. இங்கு இம்மரத்தின் வேர் மேலேயும் கிளைகள் கீழேயும் இருப்பதாகக் கூறப்படுகிறது. 'ஊர்த்வம்' என்ற சொல்லுக்கு மேன்மையான என்றும் பொருள் கொள்ள முடியும். மேன்மையான அவ்யக்தம் என்ற பொருளிடத்திருந்து அதன் வேர் கிளம்பி, ஜடம் என்ற நுனி இலைகள் வரை இச் சம்சாரம் என்ற மரமானது வளர்ந்திருக்கிறது. 'அச்வத்த' என்ற வார்த்தையே இவ்வுண்மையை விளக்குகிறது. அஸ்வ-த-எனப் பிரித்து நாளை இருப்பது எனும் நிச்சயமற்றது எனப்பொருள் கொள்ளவும் இடமுண்டு. அநித்யமான பொருள்களையும் அழிவையும் உடையதே சம்சாரம் எனப்படுகிறது. சம்சாரத்தை வர்ணிக்கவே அச்வத்தமானது குறிப்பிடப்படுகிறது.

சம்சாரமாகிய மரத்தை ஆத்ம ஞானம் எனும் கோடாரியால் வெட்டிக் களைய வேண்டும். பரப்ரம்மத்திலிடமிருந்து உயிர் சக்தியைப் பெற்று, ஹிரண்ய கர்ப்பனின் அல்லது கார்ய பிரம்மனை வித்தாகக் கொண்டு, ஜீவராசிகளின் ஸூக்ஷ்ம ஸரீரங்களை அடிமரமாகவும், பல்வகையான ஸ்ருஷ்டி பேதங்களைக் கிளையாகவும் இலையாகவும் கொண்டுள்ளது இம்மரம். இத்தனை பெரிய மரத்தை எப்படி வீழ்த்துவது எனபது புரியாமல் நாம் தவிக்கலாம். எத்தனை பெரிய மரமாக இருப்பினும்,

---

படுதுயரம் கண்டு, பரிவுகொண்டு காக்கும்
நடுவுடைய தர்மத்தர், நானிலத்தில் உள்ளனரே.

விடாமுயற்சியோடு வெட்டுபவருக்கு அது தேய்ந்தொழிந்து போகும். இது வாழ்க்கை அனுபவம். சம்சாரமும் 'விருக்ஷம்' என்று வருணிக்கப்படுவதால் விவேகம் என்ற கோடாரியால் நன்கு வெட்டவேண்டும். கோடாரி மழுங்கி விடாதபடி அடிக்கடி ஆத்மத்யானம் எனும் சாணையில் தீட்டிக் கூர்மைப் படுத்திக் கொண்டு இதை வெட்டிக் களைய முடியும் என்று, கீதையில் கண்ணபெருமான கூறுகிறார். ''அஸங்கமஸ்தரேண [4]த்ருடேன [3]சித்வா'' எனப் பேசுகிறார் பகவான்.

அடுத்த மந்திரத்தில் இக் கருத்து மற்றொரு வகையில் விளக்கப்படுகிறது.

> '' யதி[3] தம்[5] கிஞ்ச ஜகத் ஸர்வம் ப்ராண ஏஜதி நி : ஸ்ருதம்
> மஹத்[3] பயம்[4] வஜ்ர முத்லதம் ய ஏதத்[3] விது[3]ர ம்ருதாஸ்தே [ப[4]வந்தி

இவ்வண்ட மனைத்தும் பிரம்மத்தினிடமிருந்து தோன்றியுள்ளது. பிராணனிடமே (பிரம்மனிடமே) அசைகின்றது. ஓங்கி நிற்கும் இடி முழக்கம்போல் அது பெரும் பயமாக இருக்கிறது. இதை அறிபவர்கள் அமரர்களாகிறார்கள்.

முந்தின மந்திரத்தில் இம்மரம் முழுதும் பிரம்மத்தைத் தனக்கு வித்தாகக் கொண்டு, அதன் சக்தியாலேயே வளர்க்கப்படுகிறது என்று கூறினார் இவ்வுபநிஷத ஆசிரியர். இம்மந்திரத்தில் பிரம்மத்தைத் தன் தோற்ற ஸ்தானமாகக் கொண்டு அப் பிராணனிலேயே இவை அசைவதாகக் குறிப்பிடப்படுகிறது. பிரம்மத்தைத் தன்மையப் புள்ளியாக வைத்துக்கொண்டு அண்டசராசரம் அனைத்தும் சுழலுகின்றன. ஏஜதி என்ற சொல் இதையே குறிக்கிறது. அணுவினைப் பிளந்து அதனுள் இருக்கும் பொருளகளுக்கு மூன்று பெயரிட்டு அழைக்கின்றனர். 'எலெக்ட்ரான்கள்' 'புரோட்

நல்லோரைத் தாங்கி, நலமிலருக் கேஅறிவு
மெல்லஉப தேசிக்கும், மேலோரும் உள்ளனரே.

டான்கள்' எனும் அணுக்கள், குறிப்பிட்ட வேகத்தில் 'ந்யூட்ரான்' என்ற மையப் புள்ளி ஒன்றினைச் சுற்றிச் சுழலுவதாக விஞ்ஞானிகள் கண்டிருக்கின்றனர். சுழலும் புரோட்டான்களும், எலக்ட்ரான்களும் பல வகையான எண்ணிக்கையில் வேறுபட்ட பல வேகத்துள் சுழலுகின்றன. வேகமும் எண்ணிக்கையும் மாறும்போது அவற்றின் தொகுதியாக அமைந்துள்ள பொருள்களும், மாறி அமைகின்றன. இப்படியாக, ஒருமூலப்பொருளை அதனுள் இருக்கும் எலக்ட்ரான் புரோடான்களை மாற்றி அமைப்பதன் மூலம் மற்றொரு மூலப்பொருளாக மாற்றிவிட இயலும். பொருள் என்பது அசையும் சக்தியே (matter is nothing but vibration of energy) என்று இன்று ஆராய்ச்சிக் கூடங்களில் கண்டுள்ளனர். பிரம்ம சக்தியின் பலவகைத் தோற்றமே இப்பிரபஞ்சம் என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. மையப் புள்ளியாக ந்யூட்ரான் இல்லாமல் எப்படி எலக்ட்ரான்களும் புரோட்டான்களும் சுழலுவது இயலாதோ அது போன்று ப்ரம்மமாகிய மையப்புள்ளி இல்லாது இந்தப் பிரபஞ்சம் சுழலாது. இதைத்தான் பிராணனிடமே இவையெல்லாம் சுழலுகின்றன. "ஸர்வம் பிராண எஜதி நிஸ்ருதஃ" என்ற வாக்கால் விளக்குகிறான் காலதேவன்.

(தொடரும்)

நல்லார்கள் தீயார்கள் என்னுமல், ஐம்பூதம்
எல்லார்க்கும் வாழ்வை யினிதளித்தல் காணீரோ.

சிவவிஷ்ணு விரதம்

[ரஸபதி]

அரிய கோசலத்தின் தலைநகர் அயோத்தி. அந்நாட்டைப் பலர் ஆண்டனர். அவர்கள் அனைவரும், என்றும் சிவத்தை வழிபடுவர். திருமால் வடிவைத் தினந்தொழுவர்.

வரலாற்றுக் காலத்தில், அந்நாட்டை ஆண்டவர் ருக்குமாங்கதர். சத்திய சீலர். தர்ம சம்பன்னர். வித்தியா விநோதர் அந்த அரசர். அவர்க்கு ஒரு மைந்தன். அவன் மூச்சிலும் பேச்சிலும், தருமம் முன்னிற்கும்; சிந்தனைத் தருமம், செயலில் வெளிப்படும்; பேரும் புகழும் பெருகிய திருமகன்; அவன் பெயர் தர்மாங்கதன்.

ருக்மாங்கதர், பெரியதொரு நந்தவனம் அமைத்தார். நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூக்கள், ஏராளமாக அதனில் இருந்தன.

அந்த மலர்களின் மணம், தவறிய நெறியில் எவரையும் தள்ளியது இல்லை. பயன்தரும் அருள் நூற்களில் பதிந்த மனம், அந் நன்மண வழியில் நலம்பெறும். வைதிகர்கள் வருவர். பல மலர்களைப் பறிப்பர். மாலை கட்டி மகிழ்வர். குளிர்ந்த வில்வப் பத்திரங்கள், குணத்தில் உயர்ந்த துளசிகளைக் கொய்வர். கொண்டு செல்வர். சூலபாணிக்குச் சூட்டுவர். சக்கரத்தெம் பெருமாற்குச சாத்துவர். அர்ச்சிப்பர். ஆநந்திப்பர். வழிபாடு முடிந்தபின், வயிற்றுப் பாட்டு முயற்சி. இதுவே அவர்களது நடைமுறை.

அன்று சிவத்திற்கும் திருமாலிற்கும், வேறு வேறு ஆலயங்கள் இல்லை. கோயில் ஒன்று. அதனுள் இரண்டு

எக்குற்றமும் இல்லா எம்மானறன் தாள்பணிவோர்,
தம்குற்றம் தீரும் தகுதியினர் ஆவாரே.

சந்நிதி. ஒன்றில் சிவம்; மற்றொன்றில் திருமால். இந்த அனுபவத்தை, இன்றும் பல ஆலயங்களில் அறியலாம்.

கோவை மாவட்டக் கோயில்கள் பல, கண்கூடாக என்றும் அதைக் காட்டுகின்றன. நம்மாழ்வார் வருவார். சிவத்தைச் சேவிப்பார். நெடுமால் சந்நிதியில் நிற்பார். கைகுவிப்பார்.

"நாகத்து அணையானை, நாள்தோறும் ஞானத்தால்
ஆகத்து அணைப்பார்க்கும் அருள்செய்யும் அம்மானை,
மாகத்து இளமதியம் சேரும் சடையானைப்
பாகத்து வைத்தான்றன் பாதம் பணிந்தேனே"

என்று பாடுவார்; திருநாவுக்கரசர் வருவார். திருமாலைச் சேவிப்பார். சிவசந்நிதிக்கு வருவார்.

"மண்ணினை யுண்ட மாயன்
தன்னையோர் பாகம் கொண்டார்
பண்ணினைப் பாடி யாடும்
பக்தர்கள் சித்தங் கொண்டார்"

என்று பாடிப் பரவுவார். பெரும்பாலும் இத்தகைய ஒற்றுமை இல்லாத கோயில்களே இல்லை.

ஒரு நாள் அரசர், தம் அரியணையில் வந்து அமர்ந்தார். அதே நேரத்தில், மகாராஜா! நந்தவன மலர்கள், நாள்தோறும் கொள்ளை போகின்றன; வழிபடும் பக்தர்கள் அதனால் வருந்துகின்றனர் என்று, வித்தக வைதிகர்கள் விண்ணப் பித்தனர். அதுகேட்ட அரசர் மனம் அதிர்ந்தது.

நந்தவனக் காவலர் நால்வர், அச்சமயத்தில் அரச சபையை அணுகினர். குடலாட, உடலாட, அவர்கள் அரசரைக் கும்பிட்டனர். அவர்களை வெறுத்து நோக்கினர் வேந்தர்.

தம்மை அவமதிக்கும் தாந்தோன் றிகள்தமையும்,
செம்மை யுறவணைத்துச் சீர்திருத்தும் காலமரோ.

பிரபோ! கண்குத்திப் பாம்பு போல்தான் காவல் செய்கிறோம்; என்றாலும், மாயமாய் மலர்கள் எப்படியோ மறைந்துவிடுகின்றன என்று, உலர்ந்த நாவுடன் ஓதினர்.

பல சொல்லிப் பயனில்லை. முப்பது நாட்களுள், அக்கள்ளர்களைக் கண்டு பிடித்தே ஆகவேண்டும் என்று, அவர்களைக் கடுமையாக எச்சரித்தார் காவலர்.

* * * *

நந்தவனத்தைச் சுற்றி, உருவிய வாளுடன் காவல் உருத்து நிற்கிறது. எப்படி முயன்றாலும், மலர்கள் வைகறையில் மறைவது மட்டும் நிற்கவில்லை.

ஆம். முப்பது நாட்கள், இன்றுடன் முடிகின்றன; வேந்தர் முகத்தில் எப்படி விழிப்பது? என்று, காவலாளிகள் கண்கலங்கினர். மனம் குழம்பினர்.

வழியே வந்த துறவி ஒருவர், கம்பீர அந் நந்தவனத்தைக் கண்டார். அதன் அழகில் மயங்கினார். அங்கேயே நின்றார்.

காவலாளிகள், அவரைக் கண்டனர். யாரிவர்? ஏன் இப்படி விழிக்கிறார்? இவர்தான் கள்ளரோ? ஆவதுஆக என்று விரைந்தனர். அவரைப் பிடித்தனர். இறுகப் பிணித்தனர். இழுத்துச் சென்றனர். மனம் நொந்திருக்கும் மன்னர் முன் நிறுத்தினர்.

பிரபோ! தவவேடம் இது பகல்வேடம். மலர்களைக் கொள்ளையிடும் மாயக்காரன், இவனாகத்தான் இருக்க வேண்டும். பிடித்தோம். மீறவில்லை. பிணித்து வந்தோம் என்றனர்.

அரசர் துறவியை நோக்கினார். அமைதி முகம். அதனில் தவஒளி. கண்டார். மனம் கலங்கினார். எழுந்தார். விரைந்தார். கட்டை அறுத்தார். விழுந்து பணிந்தார்.

கைகாலை வெட்டிக் கடுத்த கனமத தீயரையும்,
வைதல் செய்யாமல் ஜயதேவர் வாழ்த்தினரே.

ஸ்வாமி! மாதவரை வழிபட மலர்கள் பயன்படும். அதற்கென்றே நந்தவனம் அமைத்தேன். அவைகள் பசிக்குப் புசிப்பதல்ல; மலர்கள் கொள்ளை போகும் நோக்கம் அறிந்திலன். பற்றற்ற தங்களை, கலங்கிய அறிவால் காவலாளிகள் பற்றினர். மன்னிக்க என்று அரசர் மன்றாடினர்.

வேந்தே! இப்போதைய இந்திரன், ஈஸ்வர வழிபாட்டில் இருப்பவன். மாசற்ற நின் மனமும், பக்தர்கள் பலர் பார்வையும், புனித பூஞ்சோலைக்குப் புண்ணியம் அளித்தன. அதனால் அவைகளைப் பறித்து வருக என, இந்திரன் அரம்பையரை யேவினன். அவர்கள் செய்யும் செயல் இவை!

ஓ. அப்படியா! கண்களால் அவர்களை அடியேன் காண முடியுமா?

கொம்மட்டியின் விதைகளை, அங்கு விதைத்துவிடு! பரவி எங்கும் அவை படரும். வரும்போது, அல்லது போம்பொழுது, அவர்கள் பாதம் கொடிமேல் படுமாயின், இயற்கையின் ஆகர்ஷண சக்தி, அவர்களைப் பூமிக்கு இழுத்துவிடும். பாவையரை நீ அப்போது பார்த்திடலாம். வருகிறேன் என்ற அருந்தவர், அப்போதே அங்கிருந்து அகன்றார். அரசர்க்கு இச்செயல், அதிசயமாக இருந்தது. விதையூன்றும் செயலும், விறுவிறு என்று நிகழ்ந்தது. சில நாட்களில், எழுந்த கொடிகள் எங்கும் படர்ந்தன.

* * * *

அரம்பையர் வந்தனர். ஏராளமாக மலர்கள் பறித்தனர். விண்ணில் எழுந்தனர். துரதிர்ஷ்ட வசமாக, கோதை ஒருத்தியின் கால் கொடியில் பட்டது.

அதன் பயனாக, அவள் தேவதத்துவம் அகன்றது. ஆ என்று அலறினள். மேலெழ முடியாமல், அம் மெல்லியல்

வெட்டிக் கிளைகளை வீழ்த்தினர்க்கும், மெய்தளைத்து,
ஒட்டி நிழலளிக்க, ஓங்குமரம் உண்டன்றே.

வேதனை எய்தினள். அவள் இருந்த இடம், ஒரே ஒளி அலை. காவலாளிகள் கண்டனர். அஞ்சி ஓடினர். வேந்தரிடம் விவரம் கூறினர்.

ருக்மாங்கதர் விரைந்தார். ஒளி மயமான அத்தேவமகள், அழுது குமுறுவதை அறிந்தார். அவர் மனம் இளகியது.

அம்மா ! நமஸ்காரம். பூலோக மலர்கள், பொன்னுலகம் போவது புண்ணியமான காரியந்தான். கொம்மட்டி அமைத்த செயல் கொடியதுதான். என்னை மன்னித்திடு அம்மா ! என்ன செய்தால், விண்ணில் நீ எழ இயலும் ?

அரசே ! தீது தீர்க்கும் ஏகாதசி விரதம். அதை அனுட்டித்தார் ஒருவர் உதவினால், நான் மேல் எழ முடியும் !

ஓ ! அப்படி ஒரு விரதம் இருக்கிறதா ?

அரசே ! திருமால் அருளால், ஏகாதசியில் அமுதம் பிறந்தது. அதே நேரத்தில், ஆலகாலமும் பிறந்தது. அது கண்டு, அஞ்சி உலகம் அலறியது. பயங்கர விடத்தை சிவனார் பருகினர். யோகமுகர் ஆயினர் திருமால். இதனால் யாது விளையுமோ என்று அஞ்சிய இமையவர், அன்று முழுதும் உணவின்றி, உறக்கமின்றி, வரத சிவத்தையும் திருமாலையும் வழிபாடு செய்தனர். துவாதசி பிறந்தது. இடையூறு ஒன்றும் இல்லை. சிவவிஷ்ணுக்களை அபிஷேகித்து, அலங்கரித்து, நிவேதித்து, பகதி செலுத்தினர் ; அதன் பின் தாமும் பாரணை செய்தனர். இமையவர்கள், சிவத்தையும் திருமாலையும், அன்று இறைஞ்சியபடி வழிபடுதல்தான் ஏகாதசி விரதம். சிறக்க உனக்குப் பாலூட்டி வளர்த்த செவிலியை, இங்கே வரச்செய் ; மற்ற விவரம் பிறகு கூறுகிறேன்.

அரசர் கட்டளைப்படி, உடனே அவளும் வந்தாள்.

கோபம் பெருகக், குறுகுறுக்கும் தீயரையும்,
சாபம் தரல்எளிது ; காபபவர்சான் றுண்மையரே.

அம்மா! உருக்குமாங்கதர் தந்தை, ஒரு பிழையும் இல்லாத உன்னை, குரூரமாக ஒரு நாள் கோபித்துக் கொண்டார். அநியாயமாக நிந்தித்தாரே என்று, அயர்ந்தாய். இரவும் பகலும் பட்டினி கிடந்தாய். கண்ணும் உறங்கிலை: சிவராமா! சிவராமா! சிவராமா! சிவ சிவராமா! என்று உருவேற்றி யிருந்தாய். அன்று ஏகாதசி புண்ணிய காலம். மறுநாள் பகல் உணவுண்டாய்; அன்று துவாதசி. அவ்விரதப் பயன், உன்னை அறியாதே உன்னிடத்தில் உறவு பூண்டது. அப்புண்ணியப் பயனில் பாதிதா! போதும் என்ருள் அப் பூவை.

பாதியா? உரிய பயனை உதவுமேல், முழுப்பயனையுமே தருகிறேன் என்று தாரை வார்த்தாள் அத்தையல். அவ்வள வில், விண்மகள் மேனி மின்னியது. அதன்பின் அவள், அமரலோகம் எய்தினள். இச்சம்பவம், ஒரு அதிசய அனுபவ மாக இருந்தது. மகிழ்ந்தது மன்னர் மனம்.

இன்று முதல் குடிகள், மேன்மைதரும் இந்நோன்பை மேற்கொள்ளுங்கள்! என்று, எங்கும் பறையறைவித்தார் பார்த்திபர். தாமும் அந்நோன்பைத் தழுவினுர். இதன் பயனுக, சிவலோகம், வைகுந்தம் பலர்க்கு சித்தித்தது.

இயமன் இந்த அருமை அறிந்திலன். புறப்பட்டான். கயிலையுள் புகுந்தான். அது சிவமும் திருமாலும், சேர்ந்திருந்த நேரம். வந்தவன், இருவரையும் வணங்கினுன்.

"ஆல மாமர நீழல் நான்மறை ஆதி ஆகம நூலெல்லாம்
சீல மாமுனி வோர்க ளானவர் தேறவே புகல் தேசிகா!
வால மாமதி சூடு நீடுசெவ் வானநேர் சடை வானவா
பால லோசன! ஆல போசன! பால மானுறு பாணியாய்"

செருக்கு மிகுந்து, சிறியோர்செய் தீமைப்
பெருக்கங் கண டன்னவரைப், பொறுப்பதுவான் புண்ணியமே

"சீதரா! உமை சோதரா! எமதீது அரா(வு) அர நாம! தா
மோதரா! வனமாலை சூடு முகுந்த! ராச சகுந்தம் ஊர்
நாத! ராவணனைத் தடிந்திடு நாரணா! தழல் நாறுகண்
காது அராஅணை மீது, கண்துயில் கண்ணனே!
கடல் வண்ணனே!"

கைலாச வாசா! வைகுந்த மூர்த்தீ! ஏக மூர்த்தம் இரு மூர்த்தமாகி, மற்றும் எண்ணிறந்த திருமேனி தாங்கி, அவரவர் பரிபாகத்திற்குத் தக்கபடி ஆடல் புரியும் அந்த அற்புதத்தை, எம்மால் அறிய இயலவில்லையே! திருநீறு, திருமண் என்ற சின்னத்தால் வேறுனர்; தெய்வ சிந்தனையில் ஒன்றுனர். சிவலோகம் எய்தினர், பரமதபதம் அடைந்தார்; இப்படிப் பெயரளவில் இருமை; முத்தி எய்தினர் என்பதில் ஒருமை. இது அனுபவ முழுமை. ஏகாதசியன்று, சிவனடியார் பூசித்து சிவலோகம் சேர்கின்றர்; திருமாலடியார் வழிபட்டு, பேருன வைகுந்தம் பெறுகின்றர். ஓயாத சமய சண்டை ஒழிந்தது. அதனல், இனி எவரும் நரகம் புகார் என்று நம்புகிறது என் மனம். இருபாலரையும் ஒன்று படுத்தும் இந்த மாபெரும் விரதம், மதிப்பிற்கு உரியதுதான். இனி எனக்கு உத்யோகம் இராது என்று எண்ணுகிறேன் என்ருன், இயம தருமன். சிவமும் திருமாலும் சேர்ந்து சிரித்தனர்.

தருமா! அந்தக்கரண சேட்டை அழிந்தவர்க்கு, ஆகாமிய வினையில்லை. ஆகாமியம் இல்லையேல், பிறப்பில்லை. உண வின்மை, வழிபாடு, ஜெபம், தியானம் முதலியவை, உயிரை எம்மிடம் ஒப்படைக்கும் முயற்சிகள். போலிப் போக்கினர்க்கு, இது குறித்துச் சொன்னலும் புரியாது. விரதிகட்கு எம்பதம். மற்றவர்கட்கு உன் உலகம். விரத சீலர்கள் பெருமை, இனி நிலவுலகில் விளங்கும். அதை அண்மையில் நீ அறிவை! என்ருர் சிவபிரான். அதன்பின் தருமன், வணங்கி விடை பெற்றுத் தன்னுலகம் சென்ருன்.

* * * *

பகைப்புலனை விட்டொழித்து, பண்புமனங் கொண்டு,
நகைமுகத்தர் ஆவது, நல்வாழ்வாம் என்பாரே.

விலங்குகள் வனத்தில் பெருகின. அவைகளால் பயிர்கள் அழியும். அங்ஙனம் ஆகாதபடி, ருக்மாங்கதர் படைகளுடன் புறப்பட்டார். வேட்டையாடினார். தொல்லை விலங்குகள் பல தொலைந்தன. மாலை மணி நான்கு. அயர்ச்சி மிகுந்தது. படைகளைப் பிரிந்து, ஒரு ஆலமரத்து அடியில் தனியே அமர்ந்தார்.

எங்கிருந்தோ ஒரு தேவகானம் கேட்டது. அந்த இசையால், வேட்டையில் பட்ட சிரமம் பறந்தது. யார் இப்படிப் பாடுவது ? எழுந்தார். இசைவந்த திசைநோக்கி நடந்தார்.

என்ன வியப்பு ! இயற்கையும் செயற்கையும் இணைந்த ஒரு திருமகள், எதிர்ப்பட்டாள். சூழ்ந்தது தேவ சூழ்ச்சி; அதன் பயனாக, அவளைக் கண்ட மன்னர் உடலில், கனல் ஏறியது. கண்கள் கலந்து உறவாடின. இது ஆரம்பம்.

யார் நீ? மயங்கா என்மனம், மங்கை உன்னைக் கண்டு மயங்குகிறதே ! நீ எந்தவூர் ? யார் மகள் ?

இப்போது நான் ஒரு அகதி. நாராயண முனிவர் மகள். என் பெயர் மோகினி என்று, நாணத்துடன், வலதுகால் பெருவிரல் நிலம் கிளற, வாயிலிருந்து இரண்டொரு வார்த்தைகள் உதிர்ந்தன.

அப்படியா ! இனி நீ அகதியல்ல. இருவரும் காந்தர்வ மணம் செய்வம் ! உனக்கு சம்மதந்தானா !

ஆசைக்கு நாள் அறுபது ; மோகத்திற்கு நாள் முப்பது என்பர். அதுபோல் வாழ்க்கை ஆகப்படாது. என் சொல்லை நீர் தட்டுவது இல்லை என்று ஆணை யிட்டால், தாலிக்குக் கழுத்தை நீட்டத் தடையில்லை.

மோகினீ ! உன் மொழியை மீறமாட்டேன் ! என்று ஆணையிட்டார் அரசர். அதன் பின் செய்தி யாது ? காந்தர்வ மணம். இருபது நாள்கள், உலகையே மறந்த ஒன்றித்த வாழ்வு.

* * * *

ஒருநாள் அரசர். வைகறையில் நீராடி அனுட்டித்தார். நாடோறும் உள்ள வழக்கப்படி, தாம்பூலத்தை மோகினி தந்தாள். மங்கல மரபு இது. மன்னர் வாங்கினர்.

வந்த விருந்தினர் மனநோகச் செய்யாமை,
எந்தக்கா லத்திற்கும், ஏற்றமென எண்ணீரோ.

திடும் திடும் திடும். இன்று ஏகாதசி. மறவாதீர்கள்! திடும் திடும் என்று வீதியில் பறை ஒலித்தது. மன்னர் திடுக்கிட்டார்.

மோகினீ ! பிடி பிடி! இன்று விரததினம். தாம்பூலம் தரிப்பது தவறு.

தங்களிடம் காலையில் தந்ததை, மறுப்பது மரபுதானா ?

மோகினீ ! நெருப்புப் போல்வது சிவம். நீர் போல்பவர் திருமால். இரண்டும் வியாபக வியாப்பியம்; இந்த இரு மூர்த்த அருள் நிழலில், இரண்டறக் கலக்க வைக்கும் விரதம் இது. தங்கமான விரதம் பங்கப்படுவது ஆகாது.

தங்கமான நான் தந்ததுமட்டும் பங்கப் படலாமா ! அன்று இட்ட ஆணையை எண்ணிப் பாரும் !

உடலிற்குரிய நீ பிரிவதானாலும், உயிர்க்குரிய விரதம் அழிய உடன்பட மாட்டேன !

அப்படியானால், நான் போகிறேன் ! என்று, விறுவிறு என்று மோகினி வெளியேறினாள்.

அச்செய்தியைத் தர்மாங்கதன் அறிந்தான். ஓடிவந்தான். சிற்றன்னையை வணங்கினான். அம்மா ! யாவும் நான் அறிவேன். வாருங்கள் சொல்கிறேன என்று, வற்புறுத்தி அழைத்து வந்தான்.

தர்மாங்கதா ! விரதசீலம் நீங்கலாக, அன்று இட்ட ஆணையின்படி, தையல் இவள் என்ன சொன்னாலும் தவற மாட்டேன் ! வாக்குத் தவறாத பரம்பரையில் வந்தவன் நான். இந்த உபதேச சீலத்தை அவள் ஒப்பமாட்டாள்.

ஆமாம் ! பிள்ளை தலையை சீவும் என்றால், சீவிவிடுவார் இவர் ! என்று, எள்ளி நகைத்தாள் மோகினி.

தர்மாங்கதா! வா இப்படி என்று, வாளை உருவினார் மன்னர். கும்பிட்டபடி அணுகி நின்றான குமாரன். ஆ! ஆ! என்று, அண்மையில் இருந்தவர் அலறினர்.

எள்ளும் நீரும் இறைக்க இருந்தவன் ; பெயர் சொல்லப் பிறந்த பிள்ளை ; எதிர்கால மன்னனாக இருந்த நன் மகனை, சிவ

மூடர் பிழைபொறுக்கும் முக்தர்கள், எந்நாளும்
கேடுசெய மாட்டார் ; கேண்மைமுகம் காட்டுவரே.

நாராயண சிவ நாராயண சிவநாராயண சிவசிவா என்று, பரமனை வாயால் பாடி, மனத்தால் நினைந்து, வானை ஓங்கினர்.

அதிர்ந்தது பூமி. அம்மா! என்றது ரிஷபம். கிருஷ்ணா! என்றது கருடன். மண்ணவர் கண் மழை சிந்த, விண்ணவர் பூமழை பொழிந்தனர். மன்னரும் மற்றையரும், அதிசயித்தனர். விண்ணை நோக்கினர். உமையுடன் சிவனார். திருமகளுடன் திருமால். கலைமகளுடன் பிரமா. இந்திரன், தேவர்கள் யாவரும், வானில் சேவை வழங்கினர்.

ஹர ஹர ஹர ஹர ! நீராறு சடையாய் ! நெற்றியில் கண்ணுடையாய் ! கொன்றை யணிகோவே ! கணபதியையும் கந்தனையும் தந்த எந்தையே ! மலைமகள் மணாளா ! உமது மலரடிகட்கே அடைக்கலம் !

ஹரிஹரி ! அச்சுதா ! காயாம்பூ வண்ணா ! மாயவா ! கோக்களைக் காத்த கோபாலா ! சேடசயனா ! திருமகள் மார்பா ! உமது திருவடிகட்கே அடைக்கலம் !

நான் மறையும் நடனமிடும் நான்முகம் கொள் கோவே ! கலைமகள் பதியே ! அடைக்கலம் பிரபோ ! அடைக்கலம் என்று, ஆநந்தம் கொண்டு, பாடி யாடிப் பரவசம் எய்தினர் பார்த்திபர்.

ருக்மாங்கதா ! கயிலாயம் வைகுந்தம் இரண்டில், எது உனக்கு விருப்பமோ, வளரும் உன் குடும்பத்தோடு அங்கு வா என்று, திருமாலும் சிவனும் திருவாய் மலர்ந்தனர்.

நாட்டு மக்கள், என் சொற்படி நோன்பு நோற்றனர் ; அவர்கட்கும் பேறளிக்க என்றார் அரசர்.

அவர் விண்ணப்பித்தபடி, சிறந்த பேறு எவர்க்கும் சித்தித்தது. அரசர் தன் குடும்பத்தொடு அருங்கதி எய்தினர்.

உலகியல் போக்கை உணர்ந்தும், அரிய இது போன்ற வரலாறுகளை நினைந்தும், இருசமயப் பெருமக்கள், வாதநோய் உலகுள் வாராதபடி, உணர்வால் ஒன்றுதல் கொண்டு, கனிவு காட்டி யாவர்க்கும் கைகொடுக்க வேண்டுகிறோம்.

வாழ்க உலகம்

ஓம்

பெருமைவண்மை, செல்வம் பெருகியிருந் தாலும்,
ஒருமையுளம் இன்றேல், ஒருபயனும் இல்லையரோ.

SIVA TIRU KAZHU KUNDRAM

SIVAPPADI SIVA VIZHA

The eighth of July 1962 is a memorable day for this sacred centre of piety and devotion. About a thousand devotees had gathered by 8 a.m. at the foot of the hill, all reciting the holy word "*Namasivaya*" and "*Sivayanamah*". These sacred sounds remind man of his two composite natures. The first is the cognition of his soul which is the universal part of his being and which expresses itself in terms of universal love, and the sense of the one indivisible and integral spirit—the *Paramasivan*. There is no second entity in the world in this state. For, here all is one, and one only and the plurality of numbers is lost in the unity of all existence. Here one and one make only one. This is what may be called the realisation of the soul or *mukti*. Here lies the true joy of life.

In the pervading background of the universal adwaitic base, an immense plurality of matter and spirit, creation in fact plays, and the dance of creation in one of its aspects is the history of human life. Where the

separatism and individuality of human life is shed, the universal *Brahman* alone survives. As the Lord is omnipresent, omniscient and omnipotent, to merge one's thoughts in him and to do one's duties in life in his thought, is the easiest approach to realisation. A spell of Bhajan is most auspicious of success in the battle of life.

Thiruppugal Mani.

பெருத்த பாருளீர் ! உ நீங்கள் வாருமே !!

திருவண்ணமலையில்

ஸ்ரீ அருணகிரிநாதர் திருவிழா

★

8-வது ஆண்டு 15–8–'62 புதன்கிழமை

காரைக்கால் அம்மையார் பந்தலில்

★

நாதஸ்வர இன்னிசை, சான்ருேர்களின்
சொற்பொழிவு, தேவார, திருப்புகழ்
இன்னிசை

★

இரவு ஸ்ரீ அருணகிரிநாதர்
அலங்கார விமானத்தில் திருவீதிகளில் பவனி

ஞானவடி வாகி,முது ஞானவிதை யாகும்
நன்னுதலின் முலையமுதுக்(கு) இன்குழவி யாகி,
ஞானமெனும் பாற்கடலின் நடுச்சுழிய தாகி,
ஞானநிழ லாம்பெரியர் நல்இடமும் ஆகி,
ஞானநிறை கதிராகி, ஞானியர்க்கும் எட்டா
ஞானஇரு சத்தியுடன் இருந்(து) எவையும் காத்து,
ஞானமொடு வடநிழலின் இருப்பார்க்கும், விருப்பாம்
ஞானவுரை விரித்தகுரு நாதனடி போற்றி.

—வென்றிமாலைக் கவிராசர்.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR :: MADRAS-90.

No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
No. 1506

—208

Coffee
Ours for Quality

RAW ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) **PRIVATE LTD. MADRAS**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 113

குடை மார்க் பினாயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளர்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982
விநியோகஸ்தர்கள்:
கார் & கம்பெனி
1/6, செகின் லேன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22058

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.
அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65. Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.